JULY 15, 2020
WEDNESDAY
VOL: 006/048
RS. 10.00
LATE CITY★

தேர்தல் சிறப்பிதழ் Rs.10

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk
www.tamilmirror.lk

தமிழ் Mirror









# ‘கொரோனா சவாலை வெல்வேன்’

கொரோனா வைரஸிடமிருந்து மக்களை பாதுகாப்பதற்காக, எந்தவொரு சவாலையும் வெற்றிகொள்வேன் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, நாட்டுக்குள் அவ்வப்போது கொரோனா வைரஸின் தாக்கம் ஏற்படக்கூடும். அதனையும் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது தொடர்பில், ஜனாதிபதி செயலணியுடன் நேற்று (14) நடத்தப்பட்ட சந்திப்பின் போதே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ், வியாபிப்பதை கட்டுப்படுத்த வகுக்கப்பட்ட திட்டத்தை

தொடர்ச்சி P2

## ‘வதந்திகளை நம்ப வேண்டாம்’

சமூகத்தில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர் கண்டறியப்படும்போது, அது தொடர்பாக அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்குமெனத் தெரிவித்த சுகாதார பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் அனில் ஜாசிங்க, வதந்திகளை நம்பி மக்கள் அச்சமடைய வேண்டாமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.



தொடர்ச்சி P2

## ‘மீண்டுமொரு முறை முடக்கிவிடாதீர்கள்’

நாட்டிலுள்ள சுகாதார ஊழியர்களின் திருப்திகர செயற்பாடுகளை மென்மேலும் ஊக்குவிப்பது தொடர்பாக அரசாங்கம், ஆகக் கூடுதலான அவதானத்தைச் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ள முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, நாட்டை மீண்டுமொரு முறை முடக்கிவிட வேண்டாமெனக் கோரியுள்ளார்.

தொடர்ச்சி P2

பொலிஸாரைத் தவிர வேறெவரும்

# ‘கைதுசெய்ய முடியாது’

### யாழில் தேசப்பிரிய அறிவிப்பு: 75 கள்ளவாக்குகள் குறித்து முறைப்பாடு கிடைத்துள்ளது என்கிறார்

■ என்.ராஜ், எம்.றொசாந்த், எஸ்.நிதர்ஷன், டி.விஜித்தா

நாடாளுமன்றத் தேர்தல் விதிமுறைகளை மீறுவோரை கைதுசெய்யும் அதிகாரம், பொலிஸாரைத் தவிர வேறெவருக்கும் இல்லையெனத் தெரிவித்துள்ள தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, வடக்கில் இடம்பெறும் தேர்தல் விதிமுறை மீறல்கள், ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது அதிகமாகும் என்றார்.

தொடர்ச்சி P2

மக்களின் நிலையை மாற்ற

## ‘ஆணையிடும் அதிகாரம் தேவை’

■ ஜே.ஏ.ஜோர்ஜ்

மலையக மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு, ஆணையிடும் அதிகாரம் தேவை என்று தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பதுளை மாவட்ட வேட்பாளர் செந்தில் தொண்டமான், எதிர்க்கட்சியினருக்கு வாக்களிப்பதால்,



தொடர்ச்சி P2

## பரிவாரங்களுடன் பறக்கும் ஜீவன்

### பதிலளிக்காது பம்முகிறார்


■ மகேஸ்வரி விஜயனந்தன்

தனது தந்தையான அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்கு வழங்கப்பட்ட அமைச்சரவைப் பாதுகாப்பு அதிகாரிகள், வாகனங்கள் மற்றும் பரிவாரங்களுடன், அவருடைய மகன் ஜீவன் குமாரவேல் தொண்டமான், மலையகத்தில் வலம் வருகின்றாரென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2




## பிசிஆர் பரிசோதனை...



கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்திலுள்ள கைதிகளை பார்வையிட சென்றிருந்த அவர்களின் உறவினர்கள் உட்பட சுமார் 50 பேருக்கு, வைத்தியர் தினு கமகே தலைமையிலான சுகாதாரப் பணியாளர்கள், கொழும்பு– பொரளையில் வைத்து, பிசிஆர் பரிசோதனையை, நேற்று (14) நடத்தினர். (படம் நிமல்சிறி எதிரிசிங்க)


## கொரோனா அச்சம் அதிகரிக்கும் அபாயம்

### முன்பாதுகாப்புக்காக பல இடங்கள் முடக்கம்

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள், நாட்டின் பல பகுதிகளில் ஆங்காங்கோ இனங்காணப்பட்டு வருவதனால், கொரோனா அச்சம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

நான்கு இடங்களில் 394 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கம்பஹா நீதவானும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.




தொடர்ச்சி P2



நீதிமன்றங்களுக்கு

## கைதிகளை அழைத்து செல்லல் நிறுத்தப்பட்டது

நாட்டுக்குள் ஏற்பட்டிருக்கும் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக, விளக்கமறியல் கைதிகளை நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்வது தற்காலிகமாக நிறுத்தி

தொடர்ச்சி P2

## ‘கிளிநொச்சி மாணவிக்கு கொரோனா இல்லை’

### கைதடி மாணவிக்கும் இல்லை என்கிறார் கேதீஸ்வரன்

■ எஸ்.நிதர்ஷன்

கிளிநொச்சியில், தனிமைப்படுத்தப்பட்ட கம்பஹாவைச் சேர்ந்த மாணவிக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருக்கவில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்த வடக்கு மாகாண சபை சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், கைதடி சித்த மருத்துவபீட மாணவிக்கும் கொரோனா இல்லை என்றார்.

நேற்று (14) மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்ட தகவலை அவர் வெளியிட்டார்.

“இவ்விரு மாணவிகளுக்கும் கொரோனா தொற்றில்லையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், சுகாதார நடைமுறைகளை பொதுமக்கள் இறுக்கமாக கடைப்பிடிக்க வேண்டும்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பரிவாரங்களுடன் பறக்கும்...

அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவினர் புடைசூழ, டிப்பெண்டர் வாகனங்கள் அனல்பறக்கும் வேகத்தில் பயணிக்க, ஏனைய வாகனங்கள் விரைந்து பயணிக்க, தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஜீவன் முன்னெடுத்துவருகின்றார்.

நுவரெலியா மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிட்ட, இ.தொ.கா தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் திடீர் மறைவையடுத்து, அவ்வெற்றிடத்துக்கு வேட்பாளராக அவரது மகன் ஜீவன் தொண்டமான், நியமிக்கப்பட்டார்.

சாதாரண வேட்பாளர் ஒருவர், இவ்வாறான பரிவாரங்களுடன் தேர்தல் சட்டத்திட்டங்களை மீறி, பிரசாரங்களில் ஈடுபடுவது தொடர்பில், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான மத்திய நிலையமே முறைப்பாடு செய்துள்ளது.

அமைச்சுக்கான பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர், பொலிஸ்மா அதிபர் உள்ளிட்டோருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக, அந்த மத்திய நிலையத்தின் தேசிய அமைப்பாளர் மஞ்சுல கஜநாயக்க, தமிழ்மிரருக்குத் தெரிவித்தார்.

“அமைச்சின் பாதுகாப்பு அதிகாரிகள் இருவரை அவர் பயன்படுத்துகின்றார். அவ்விருவரும், ஆறுமுகன் தொண்டமானின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட அதிகாரிகள் ஆவார்” என்றார்.

இதுதொடர்பில், உரிய தரப்பினருக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ள தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான மத்திய நிலையம், இவ்வாறான செயற்பாடுகள், தேர்தல் விதிமுறைகளை மீறுவனவாகும். தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ள 2020.06.06 இலக்கம் 2178/29 என்ற ஏற்பாடுகளை மீறுகிறது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, “ஏனைய வேட்பாளர்களைப் போன்று, ஜீவன் தொண்டமானும் சாதாரண வேட்பாளர். சகல வேட்பாளர்களும் சமமாகக் கவனிக்கப்பட வேண்டும். ஆனால், தந்தைக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு பிரிவின் அதிகாரிகளை அவர் பயன்படுத்துகின்றார். இது தவறென அவர்களுக்குச் சுட்டிக்காட்டியுள்ளோம்” என அமைப்பாளர் மஞ்சுல கஜநாயக்க தெரிவித்தார்.

வேட்பாளர், ஜீவன் குமாரவேல் தொண்டமான் மீது சுமத்தப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டு தொடர்பிலும், தன்னிலை விளக்கத்துக்காகவும், ஜீவன் தொண்டமானுடன், தொடர்பு கொள்வதற்கு, அலைபேசியின் ஊடாக, நேற்று (14) பிற்பகலில் பலமுறை தொடர்புகொள்ள முயற்சித்த போது, அம்முயற்சி இச்செய்தி அச்சுக்குப் போகும் வரையிலும் கைகூடவில்லை.

# ‘கொரோனா சவாலை வெல்வேன்’

விரைவுப்படுத்துமாறு பணித்துள்ள ஜனாதிபதி, நோயாளர்களைத் தேடி வலைவிரிக்குமாறும், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்தும் செயற்பாடுகளை விரிவுபடுத்துமாறும் கேட்டுக்கொண்டார். அத்துடன், கொரோனாவை கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்படும் சகல தகவல்களையும் மக்களுக்கு வழங்கப்படும் என்றார்.

ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக, கொரோனா வைரஸ் வியாபிப்பதற்கு முன்னர், நாங்கள் கட்டுப்படுத்தினோம். அதற்கு பாராட்டிய ஜனாதிபதி, புனர்வாழ்வு மத்திய நிலையங்கள் தொடர்பில் எந்தவொரு நாட்டிலும் காணக்கிடைக்கவில்லை. மத்திய நிலையங்களை பலரும் மறந்துவிட்டனர்.

“வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பிரிவினர், இராணுவத்தினர், புலனாய்வுப் பிரிவினர், பொலிஸார் உள்ளிட்டோரின் அர்ப்பணிப்பால், ஜனவரி 26ஆம் திகதி ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டது எனத் தெரிவித்த அவர், அச்செயலணியின் பங்களிப்புடன், கொரோனா சவாலை வெல்வோம். அதற்கு சகலரின் பங்களிப்பும் அத்தியாவசியமாகும்” என்றார்.

# ‘கைதுசெய்ய முடியாது’

“தேர்தல் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படமாட்டார்கள். எனினும், தீவகப்பகுதிகளுக்கு வாக்குப்பெட்டிகளை கொண்டுசென்று, வாக்கெண்ணும் நிலையங்களுக்கு விரைவாக எடுத்துவருவதற்கு கடற்படையினரும், வாக்குப்பெட்டிகளின் பாதுகாப்புக்கு இராணுவத்தினரும் பயன்படுத்தப்படுவர்” என்றார்.

வடக்குக்கு இருநாள் விஜயத்தை மேற்கொண்டிருக்கும் மஹிந்த தேசப்பிரிய, யாழ்.மாவட்ட செயலகத்தில், உதவித் தேர்தல் அதிகாரிகளுடன் நேற்று (14) சந்திப்பொன்றை மேற்கொண்டார். அதில், அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்கள், மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் உட்பட அதிகாரிகள் பங்கேற்றனர்.

அந்த சந்திப்புக்குப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கில், வேட்பாளர்களின் விருப்பிலக்கங்கள் மற்றும் சின்னங்கள் வீதிகளில் எழுதப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அவ்வாறு செய்யக்கூடாதெனத் தெரிவித்த அவர், ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது, யாழ்ப்பாணத்தில் இவ்வாறான தேர்தல் விதிமுறைகளை மீறும் சம்பவங்கள் அதிகமாகும் என்றார்.

“அரசாங்கத்தின் செலவில் நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் சில, வேட்பாளர்களால் திறந்து வைக்கப்படுகின்றன. அவ்வாறான திறப்புவிழாக்கள் நிறுத்தப்படவேண்டும். இதுதொடர்பில், உரிய தரப்பினருக்கு நான் அறிவுறுத்தியுள்ளேன்” என்றார்.

“கடந்த தேர்தலொன்றில் 75 கள்ள ஓட்டுக்கள் போடப்பட்டப்பட்டமை தொடர்பில், இந்தத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர், பொதுவெளியில் பேசியிருக்கின்றார். அதுதொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளதெனத் தெரிவித்த மஹிந்த தேசப்பிரிய, தேர்தல் ஆணைக்குழு பரிசீலித்து முடிவொன்றை எடுக்கும்” என்றார்.

தேர்தல் கடமைகள் அனைத்திலும் பொலிஸார் மாத்திரமே ஈடுபடுத்தப்படுவார்கள் எனத் தெரிவித்த அவர், தேர்தல் விதிமுறைகளை மீறுவோரை கைது செய்யும் அதிகாரம் போலிஸாருக்கு மாத்திரமே உள்ளது. வேறெவரும் அதனை செய்யமுடியாது என்றார்.

இதேவேளை, வன்னி தேர்தல் அலுவலகத்தில் அரச அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் (13) இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்துரைத்த மஹிந்த தேசப்பிரிய, சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை, தேர்தலுக்கு முன்னர் வெளியிடாவிடின், தேர்தலை நடத்துவது சிரமமாகும். வர்த்தமானியை வெளியிடாவிடின், முகக் கவசம் அணியுங்கள், கைகளை கழுவுங்கள் எனக் கூறுவதில் எவ்விதமான பலனும் இல்லை என்றார்.

# கைதிகளை அழைத்து செல்லல் நிறுத்தப்பட்டது

வைக்கப்பட்டுள்ளதென, சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

“நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய, இந்த நடவடிக்கையை எடுக்கப்பட்டது” என, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

கைதிகளின் விளக்கமறியல் நீட்டிப்பு உத்தரவு அவ்வாறே இடம்பெறுமெனத் தெரிவித்த அவர், மறு அறிவித்தல் வரையிலும், சிறைச்சாலைகளுக்கு இடையில் கைதிகளை பரிமாற்றம் செய்தல்இடை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை, சிறைச்சாலை கைதிகளைப் பார்வையிடுவதற்கு, அவர்களுடைய உறவினர்களுக்கும் ஏனையோருக்கும் ஏற்கெனவே, தடைவிதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘மீண்டுமொரு முறை...

தேர்தல் காலச் செயன்முறைகளுக்கு அமைவாக, இக்காலத்தில் பின்பற்றப்பட வேண்டிய சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை விடுக்கவேண்டியது அவசியம். அந்த வழிகாட்டல்களை அவ்வாறே பின்பற்றவேண்டும் என்றார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டரிலேயே மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

சுகாதார ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கும் செயற்பாடுகளில் இழுபறி நிலைமைகள் இருக்கக்கூடதெனத் தெரிவித்துள அவர், மீண்டுமொரு முறை நாட்டை முடக்கிவிட கூடாதெனவும் அப்பதிவின் ஊடாக கோரியுள்ளார்.

பாடசாலைகளுக்கான விடுமுறை வழங்கும் செயற்பாடுகள் வரையறுக்கப்பட்ட காலத்துக்கு மாத்திரம் மட்டுப்பட்டதாகக் இருக்க கூடாதென குறிப்பிட்டுள்ள முன்னாள் சபாநாயகர், நாட்டின் சுகாதார செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியது தற்காலத்தில் மிக அவசியமானது என்பதுடன், சுகாதார ஊழியர்களின் செயற்பாடுகளை ஊக்குவிப்பது தொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்றார்.

# ‘கிளிநொச்சி மாணவிக்கு...

கொரோனாவினால், வடக்கில் பெரும் பாதிப்பில்லை” என்றார்.

அதுமட்டுமன்றி, இந்தியாவிலிருந்து இலங்கைக்குள், வடகடலின் ஊடாக சட்டவிரோதமாக நுழைவோர் தொடர்பிலும் அவதானமாக இருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்ட அவர், மக்கள் தங்களுடைய பாதுகாப்பில் முழுக்கவனத்தை செலுத்தவேண்டும் என்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகம், தொழில்நுட்ப பீடத்தில் கல்விப்பயிலும் மாணவியொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருக்கலாமென்ற சந்தேகத்தை அடுத்து, அம்மாணவி, கிளிநொச்சியிலுள்ள பிறிதோர் இடத்தில், நேற்று முன்தினம் (13) தனிமைப்படுத்தப்பட்டார்.

இதனையடுத்து, அவ்வளாகத்தில் தொழில்நுட்ப, விவசாய மற்றும் பொறியியற் பீடங்கள் அனைத்தும் முடக்கப்பட்டன. மாணவர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாகத்தினர் வளாகத்துக்குள்ளையே முடக்கப்பட்டனர். இதனால், அறிவியல் நகர் வளாகம் நேற்று (13) மாலையிலிருந்து முற்றாக முடங்கிவிட்டது.

# ‘மக்களின் நிலையை...

எவ்விதப் பயனும் மலைய மக்களுக்கு இல்லையெனவும் சுட்டிக்காட்டினார்.

தமிழ்மிரருக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் அவர் இந்த விடயத்தைக் கூறியதுடன், ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்குப் பின்னர், மலையக மக்கள் ஒடுக்கப்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் உண்மையாயின், தாம் அதிகாரத்துக்கு வந்த பின்னர், இவ்வாறான விடயங்களுக்கு இடமளிக்கப்போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சிக்கு வாக்களித்தால், மலையக மக்கள் ஆணையிடுகின்ற சக்தியாக இருக்க முடியாது என்று கூறிய அவர், அவ்வாறு இடம்பெற்றால் கைகட்டிக்கொண்டு அவர்கள் சொல்வதைக் கேட்கும் நிலையே காணப்படும் என்றும் கூறினார். அத்துடன், சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை மக்களிடம் சமவுரிமையற்ற தன்மை காணப்படுவதாக நீண்ட காலமாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றதையும் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான ஒரு நிலையில், ஆளும்கட்சிக்கு, மலையக மக்கள் வாக்களிக்கும்போது, ஆணையிடுகின்ற சக்தியாக மாறுவதுடன், அவ்வாறான நிலையை மாற்ற முடியும் என்றார்.

# ‘வதந்திகளை நம்பவேண்டாம்’

வதந்திகளை நம்பி மக்கள் அச்சமடைய வேண்டமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

சமூக வலைத்தளங்களில் போலியான வதந்திகள் பரவி வருவதாகச் சுட்டிக்காட்டிய அவர், கந்தகாடு சீர்த்திருத்த மய்யத்தில் பணியாற்றியோர், கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள், தங்களது சொந்த பிரதேசங்களுக்கு செல்லும்போதே, இவ்வாறான வதந்திகள் பரப்பப்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர், ஓமான் நாட்டிலிருந்து, நேற்று (14) வருகைத்தந்த மூவருக்கு, கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டிருந்தது என்றும் கண்டி குண்டசாலை பிரதேசத்தில் வசிக்கும் கந்தகாடு முகாமின் ஆலோசகர் ஒருவருடைய மனைவி, மாமனாருக்கு கொரோனா தொற்று இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

அதேபோல் மேற்படி ஆலோசகரின் மற்றுமோர் உறவினருக்கு கொரோனா தொற்று இருப்பதாக அறியப்பட்டிருந்தது என்றும், ராஜாங்கனை பிரதேசத்தை மய்யப்படுத்தி முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளின் போது, அங்குள்ள மற்றுமொரு நபருக்கு தொற்று இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

சமூகத்தில் ஒருவருக்கு தொற்று இருப்பதாக உறுதி செய்யப்படும்பட்சத்தில், அது தொடர்பாக நாட்டு மக்களுக்கு உடனடியாக அறிவிக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

# கொரோனா அச்சம் அதிகரிக்கும் அபாயம்

இந்நிலையில், கொரோனா மேலும் வியாபிக்காமல் இருப்பதற்கு, முன்னேற்பாடாக பொதுக் கட்டடங்கள் பல முடக்கப்பட்டுள்ளன. பலர் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். இன்னும் பலர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கந்தகாடு போதைப்பொருள் புனர்வாழ்வு மத்திய நிலையத்தில், புனர்வாழ்வளிக்கப்பட்ட வெலிக்கடை விளக்கமறியல் சிறைச்சாலை கைதியொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டதை அடுத்தே, ஆங்காங்கே கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றமை அதிகரித்துவருகிறது.

## கம்பஹாவில் இருவர்

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தின் ஆலோசகருக்கும், அவருடைய சாரதிக்கும் கொரோனா தொற்றியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இவ்விருவரும் கம்பஹாவைச் சேர்ந்தவர்களாவர்.

சாரதி, கம்பஹா நீதிமன்றத்தில், ஜூலை 7ஆம் திகதி நடைபெற்ற திறந்த வழக்கு விசாரணையில் சாட்சியளித்துள்ளார். அதன்பின்னர், தன்னுடைய மனைவியுடன் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை உள்ளிட்ட இன்னும் பல இடங்களுக்குச் சென்று திரும்பியுள்ளார்.

ஆலோசகர், கணேமுல்லையில் உள்ள தன்னுடைய வீட்டிலேயே இருந்துள்ளார். இவ்விருவரும் தங்களுடைய வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## நீதவானும் தனிமை

கம்பஹா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவானும், அவரது நீதிமன்ற உதவியாளர்கள் உட்பட 8 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## ஹோமாகமவில் 35 பேர் தனிமை

கந்தகாடு புனர்வாழ்வு மத்தியநிலையத்தில் சேவையாற்றிய ஹோமாகம-கொடகமவைச் சேர்ந்த இராணுவ அதிகரிகள் இவருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது கண்டறியப்பட்டதை அடுத்து, அவ்விருவருடன் நெருக்கி பழகிய 35 பேர், சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

விடுமுறையில் வந்த அவ்விருவரும், மீளழைக்கப்பட்டதை அடுத்து கந்தகாடு முகாமுக்கே திரும்பிச் சென்றுவிட்டனர்.


அதிலொருவர், ஹோமாகம தனியார் வைத்திய மத்திய நிலையத்துக்குச் சென்றுள்ளார். அதன் வைத்தியர், பணியாளர்கள் மற்றும் தங்க நகைக்கடையின் ஊழியர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இராணுவ வீரர்கள் இருவரின் குடும்ப அங்கத்தவர்கள், தனிமைப்படுத்தலுக்காக, இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என அப்பிரதேசத்துக்குப் பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர் அறிவித்துள்ளார்.

## ராகமையில் பூட்டு

ராகம பிரதேசத்திலுள்ள தனியார் வைத்திய நிலையத்தின் அதிகாரியொருவருக்கு கொரோனா தொற்றியிருப்பது கண்டறியப்பட்டது. அதனையடுத்து, அந்நிலையம் மூடப்பட்டது.

அந்த அதிகாரியுடன் நெருங்கி பழகிய, ஊழியர்கள் சிலரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.




## கலவானையில் கடைகளுக்கு பூட்டு

கலவானை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் தலைவர் டப்ளியு. டீ. ரோட்ரிகஸின் அறிவுறுத்தலுக்கு அமைய, கலவானையில் 300 கடைகள் மூடகப்பட்டன.

## 9 இராணுவத்தினர் வசிக்கின்றனர்

கந்தகாடு மத்திய நிலையத்தில் சேவையாற்றும், கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படும் இராணு அதிகாரிகள் ஒன்பது பேர், மத்திய மாகாணத்தில் வசிக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## 300 பேர் தனிமை

நான்கு பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது இனங்காணப்பட்டதை அடுத்து, கண்டி, அவதான நிலைமைக்குச் சென்றுவிட்டது. அவர்களுடன் நெருங்கி பழகிய 300 பேர், சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வதிகாரிகள், பாத்ததும்பர, மெனிக்கின்ன, குண்டசாலை, தலாத்துஓய, கம்பளை, பம்பரதெனிய மற்றும் ஹசலக ஆகிய பிரதேசங்களில் இனங்காணப்பட்டுள்ளனர். இதில் சிலர், 2 நாள்கள் முதல் 10 நாள்கள் வரையிலும் கிராமங்களில் இருந்துள்ளனர் என அறியமுடிகின்றது.

## பலாங்கொடையில் 29 பேர்

கொரோனா தொற்றாளர்களுடன் நெருங்கி பழகியிருந்தனர் என சந்தேகிக்கப்படும் பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த அறுவரும், அவர்களுடன் மிகநெருங்கி பழகியிருந்த மேலும் 23 பேரும், சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

# பொலிஸாரை மோதிய டிப்பர் சாரதி கைது



பொலிஸ் அதிகாரிகள் இருவரை மோதிவிட்டுத் தப்பிச் சென்ற டிப்பர் சாரதியை, பொலிஸார் மடக்கிப்பிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம், மாத்தறை - ஹுங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டக்கடுவ பிரதேசத்தில், நேற்று (14) இடம்பெற்றுள்ளது.

விபத்தை ஏற்படுத்திய சாரதி, கட்டக்கடுவ பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில், பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் படுகாயமடைந்த நிலையில், மாத்தறை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### பேருவளை கடற்கரையில்

# 10,000 பிளாஸ்டிக் போத்தல்கள்

■ என். ஜெயரட்ணம்

பேருவளை கடற்கரைப் பகுதியிலிருந்து, சுமார் பத்தாயிரம் வெற்று பிளாஸ்டிக் குடிநீர் போத்தல்களைச் சேகரித்ததாக, பேருவளை நகரசபையின் செயலாளர் அசோக்க ரணசிங்க தெரிவித்தார்.

நாட்டில் நிலவிவரும் மழையுடன் கூடிய வானிலையைக் கருத்திற்கொண்டு, பேருவளை நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில், டெங்கு நுளம்பு பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில், பேருவளை நகரசபையால் மேற்கொள்ளப்பட்ட சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் போதே, பத்து உழவு இயந்திரங்களில் மேற்படி பத்தாயிரம் வெற்று பிளாஸ்டிக் குடிநீர் போத்தல்கள் சேகரிக்கபட்டுள்ளன.

# கெக்கிராவையில் 30 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்



கெக்கிராவ - கித்துல்பிட்டியாவ பகுதியில், 7 குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர், சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு உள்ளனரென, கெக்கிராவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தைச் சேர்ந்தவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை மூலம், கொரோனா தொற்றாளராக இராணுவ அதிகாரி ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, இராணுவ அதிகாரியின் குடும்பத்தார் மற்றும் அவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியவர்களே, இவ்வாறு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும், தியத்தலாவ தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு நேற்று (14) அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

### கந்தகாடு முகாமிலிருந்து

# ‘சமூகத்துக்குள் வைரஸ் பரவாதெனக் கூறமுடியாது’

கந்தகாடு முகாமுக்குள் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவித்த இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வா, இதனால் அங்கிருந்து சமூகத்துக்குள் நோய் பரவாதென்பது உறுதியாகக் கூறமுடியாது எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர், கந்தகாடு முகாமில் கொரோனா வைரஸ் பரவல் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. முகாமுக்குள் இருந்தவர்கள், அதன் ஆலோசகர்கள், விடுமுறையில் சென்றிருந்த அதிகாரிகள் உள்ளிட்ட சகலரையும் முகாமுக்குள்ளேயே அழைத்துவந்து பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளோம் என்றார்.

அதேபோல், முகாமுக்குள் தனிமைப்படுத்தப்பட்டிருந்த தமது உறவினர்களைப் பார்க்கச் சென்றவர்களை, இராணுவம் அடையாளம் கண்டுள்ளது எனத் தெரிவித்த அவர், அவ்வாறான 116 பேரையும் அவர்களுடன் தொடர்புபட்ட 470 பேரையும் தனிமைப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், முகாமிலிருந்து விடுமுறையில் சென்றோருடைய குடும்பத்தாரை, இராணுவ முகாம்முக்கு மீள அழைத்துத் தனிமைப்படுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதலாம் தரப்பு தொடக்கம் மூன்றாம் தரப்பினர் வரையில் தேடிச்சென்று, வைரஸ் தொற்றுக்கு ஆளானோருடன் பழகியவர்களைத் தனிமைப்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



இருப்பினும், இந்த முகாமுக்குள் இருந்து கொரோனா வைரஸ் தொற்று சமூகத்துக்குள் பரவாதென உறுதியாகக் கூறமுடியாது எனத் தெரிவித்த அவர், எனினும், அநாவசியமாக அச்சத்தை ஏற்படுத்திக்கொள்ள அவசியமில்லை என்றும் தெரிவித்தார்.

எதிர்வரும் ஐந்து நாள்களுக்குள், இந்நோய் சமூகத்துக்குள் பரவுமா என்பதை அறிந்துகொள்ள முடியும். அநுராதபுரம் - இராஜங்கனை பிரதேசத்தில், கொரோனா தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டதால், அந்த பிரதேசத்தில் முழுமையாக வைரஸ் பரவிடும் என்ற அபாயநிலை இல்லை என்று சுட்டிக்காட்டிய அவர், அவ்வாறு அறியப்பட்டால், சகலரும் தனிமைப்படுத்தப்படுவர் என்றார்.

அத்துடன், தற்போது சுமார் 7,000 பேர் வரையில் தனிமைப்படுத்தல் முகாம்களில் இணைக்கப்பட்டுள்ளனர். இந்நிலைமைகளுக்கு மத்தியில், உள்நாட்டில் வைரஸ் தொற்று பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆராய்ந்த பின்னர், வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை அழைத்துவரும் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.



# பதவியுயர்வு...

36 வருடச் சேவையை நிறைவுசெய்து ஓய்வுபெறும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியல் டீ சில்வா, நேற்று (14) முதல் அமலுக்கு வரும் வகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால், அட்மிரல் தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.








### ஜோர்தானில் இருந்து

# 285 பேர் நாடு திரும்பினர்

கொரோனா வைரஸ் பரவலையடுத்து, இலங்கைக்கு வருகைதர முடியாமல் ஜோர்தானில் சிக்கியிருந்த இலங்கையர்களில் 285 பேர், நேற்று (14) நாடு திரும்பினர்.

ஸ்ரீலங்கன் விமானச் சேவைக்குரிய விசேட விமானம் மூலம், நேற்று அதிகாலை 4 மணியளவில், கட்டுநாயக்க விமான நிலையத்தை இவர்கள் வந்தடைந்துள்ளனர்.

நாட்டுக்கு அழைத்து வரப்பட்டோரில் பலர், ஜோர்தானுக்குத் தொழில் நிமித்தம் சென்றிருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடு திரும்பிய அனைவருக்கும், கட்டுநாயக்க விமான நிலையத்தில் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிசிஆர் அறிக்கை கிடைக்கப்பெற்றதும், இவர்களைத் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ‘தமிழ், முஸ்லிம் தலைவர்களே சஜித் பிரேமதாஸவுடன் உள்ளனர்’

இராணுவ வீரர்களைக் கொன்று குவித்த கருணா அம்மான், பிள்ளையான் போன்றவர்களே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பின்னால் இருக்கின்றனரெனத் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் இம்தியாஸ் பாகிர் மாக்கார், ஜனநாயக ரீதியாக, ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமென நினைக்கும் தமிழ், முஸ்லிம் தலைவர்களே, ஐக்கிய மக்கள் சக்தியோடு உள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் தொடர்ந்து கருத்துரைத்துள்ள அவர், எம்.சி.சி ஒப்பந்தம் தொடர்பில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதித் தேர்தலின்போதும் தற்போதும், ஒரே நிலைப்பாட்டிலேயே உள்ளார்.

இலங்கை ஓர் ஏழ்மையான நாடு. உலகின் ஏழ்மையான எந்தவொரு நாட்டிலும், கொரோனா வைரஸால் அதிக உயிரிழப்புகள் ஏற்படவில்லை எனக் கூறியுள்ள அவர், கொரோனா வைரஸ் பரவலின் ஆரம்பக் கட்டத்திலேயே, உரிய தீர்மானங்கள் எடுத்திருக்க வேண்டும் எனவும், இம்தியாஸ் பாகிர் மாக்கார், மேலும் கூறியுள்ளார்.

### ராஜபக்ஷர்களின் கோரிக்கை

# ‘பயங்கரமானதொரு சமிக்ஞை’

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில், ராஜபக்ஷர்கள் 2/3 பெரும்பான்மையைக் கோரி வருகின்றனர் என்று தெரிவித்த சட்டத்தரணி லால் விஜேநாயக்க, அந்தக் கோரிக்கை பயங்கரமானதொரு சமிக்ஞை எனவும் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில், நேற்று (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரைத்த அவர், நாடாளுமன்றத் தேர்தலில், 2/3 பெரும்பான்மையைப் பெற்றுத்தருமாறு ராஜபக்ஷர்கள் கோரி வருகின்றனர். அந்த



அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவர்கள் புதிய அரசமைப்பைக் கொண்டுவரப்போவதாகக் கூறினாலும், அந்த அரசமைப்பு எவ்வாறானதென இதுவரையில் கூறவில்லை என்றார்.

புதிய அரசமைப்பு தொடர்பில் நாட்டு மக்களின் கருத்தறியவில்லை என்றும் தெரிவித்த அவர், எல்லா அரசமைப்புகளும், ஆட்சியாளர்களின் தேவைக்காகவே கொண்டுவரப்பட்டன என்றும் கூறினார்.

இவ்வாறிருக்க, அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை நீக்கும் அளவுக்கு, ஜனநாயகத்தில் காணப்படும் சகல கதவுகளும் மூடப்படுகின்றன என்றார்.


தேர்தல் காலங்களில் பொதுச்சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துவது பற்றி உங்களுக்கு தெரியுமா?

அரச வாகனங்கள், உலங்கு வானூர்தி உள்ளிட்ட போக்குவரத்து வசதிகளை பயன்படுத்தல்,
அரச மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்கள்,
அரச கட்டிடங்கள் மற்றும் பொது நிதி செயற்திட்ட மற்றும் அனர்த்த உதவிகளை பகிர்ந்தளித்தல்,
அரச நியமனங்கள், பதவி உயர்வு மற்றும் இடமாற்றும் செய்தல்

போன்ற பொதுச் சொத்துக்களை தவறான முறையில் பயன்படுத்துவது உங்களது வரிப்பணத்தை துஷ்பிரயோகம் செய்வதாகும்.



முறைப்பாடுகளுக்கு

பொதுச் சொத்துக்களை பாதுகாக்கும் வேலைத்திட்டம்
ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா, 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு 05

தொலைநகல்: 011 250 1707
துரித அழைப்பு: 076 322 3442 076 322 3662
இணையம்: apesalli.lk
மின்னஞ்சல்: pppr@tisrilanka.org

தேர்தல் காலங்களில் பொதுச்சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

சஹ்ரானுடன் தொடர்பு;

## 6 பேருக்கு மறியல் நீடிப்பு

பாறுக் ஷிஹான்

சஹ்ரான் ஹாஸிமுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட 6 சந்தேகநபர்களை, ஜூலை 27ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு, கல்முனை நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு, நீதவான் ஐ.என். றிஸ்வான் முன்னிலையில் நேற்று முன்தினம் (13) விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, காணொளி ஊடாகச் சந்தேகநபர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்த விசாரணையின் போது, மேலதிக அறிக்கைகள் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைக்காக மீண்டும் சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதேவேளை, மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர்ப் பகுதியில், கடந்தாண்டு மேற்குறித்த 6 சந்தேகநபர்களுடன் கைதான ஏனைய சந்தேகநபர்கள் சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கமைய அண்மையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அக்போகமவில் 08 பேர் தனிமைப்படுத்தலில்

ஹஸ்பர் ஏ ஹலீம், அ.அச்சுதன்

திருகோணமலை மாவட்டத்தின் அக்போகம பிரதேசத்தில், 08 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என, மாவட்டச் செயலாளர் ஜே.எஸ். டி.எம்.அசங்க அபேவர்தன தெரிவித்தார்.

கந்தகாடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் கடமையாற்றிய இராணுவ வீரர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, அவரது குடும்ப அங்கத்தவர்களே இவ்வாறு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

கந்தளாய் பிரதேச செயலகத்தில், அக்போகம பிரதேசத்தில் மேற்கொள்ளவேண்டிய முன்னேற்பாடுகள், அங்குள்ள நிலைவரம் தொடர்பிலான விசேட கலந்துரையாடல், நேற்று (14) நடைபெற்றது.

தொற்றுக்குள்ளான இராணுவ வீரரோடு தொடர்புபட்ட 50 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைக்கான இரத்த மாதிரிகள் நேற்று பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும், மாவட்டச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, “அக்போகம கிராமத்தில், 14 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேர் தமது வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்” என்றும், அவர் தெரிவித்தார்.

காணாமற்போன சிறுமிகளின்

## சடலங்கள் கரையொதுங்கின



பேருவளை - மக்கோன பகுதியில், கடல் அலையில் அள்ளுண்டு செல்லப்பட்ட 2 சிறுமிகளும், நேற்று முன்தினம் (13) மாலை, தியலகொடை கடற்கரையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனரென, பயாகலை பொலிஸார் தெரிவித்தனர்.

பேருவளை - கொபியாவத்தை பகுதியைச் சேர்ந்த பாத்திமா நிஸ்பா (வயது 15), பாத்திமா நிஸ்மா (வயது 12) ஆகியோரே, இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனரென, பொலிஸார் மேலும் கூறினர்.

தமது உறவினர்களுடன் நேற்று முன்தினம் (13) காலை மக்கொன - உஸ்வெல்ல கடற்கரையில் விளையாட சென்றபோது, இந்தச் சிறுமிகள் இருவரும் கடல் அலையில் அள்ளுண்டு செல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஒரு சிறுமி கடல் அலையில் சிக்குண்ட நிலையில், பிரதேச மக்களால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

இந்நிலையில், காணாமல் போன இரு சிறுமிகளினதும் சடலங்கள், நேற்று முன்தினம் மாலை, தியலகொடை கடற்கரையில் கரையொதுங்கியமை குறிப்பிடத்தக்கது.

## அட்டாளைச்சேனையில் 32 வீடுகளை அமைக்க நடவடிக்கை

ரீ.கே.றஹ்மத்துல்லா



“உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்” எனும் அரசாங்கத்தின் தேசிய வேலைத்திட்டத்துக்கமைய, வீடற்றோருக்கான வீட்டு வசதியை அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கை, அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய, அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 32 கிராம சேவகர் பிரிவுகளிலும் 32 வீடுகளை அமைக்கும் வேலைத்திட்டத்தை பிரதேச செயலாளரின் ஆலோசனைக்கமைய, வீடமைப்பு அதிகார சபையால், நேற்று (14) அட்டாளைச்சேனை - 10ஆம் பிரிவில், வீடமைப்புக்கான அடிக்கல் நட்டி வைக்கப்பட்டது.

வீடமைப்பு அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.ஏ.அஜ்மல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் கிராம சேவர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ். எம்.நஸீர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கொரோனா அச்சத்தால்

# ‘வாக்களிப்பு வீதம் குறையலாம்’

மகேஸ்வரி விஜயனந்தன்




கொரோனா வைரஸின் இரண்டாவது அலை தொடர்பான அச்சம் காரணமாக, வாக்களிப்பு வீதம் குறையக்கூடிய சாத்தியம் உள்ளதாகத் தெரிவித்த நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கபே) நிறைவேற்றுப் பணிப்பாளர் அஹமட் மனாவ் மக்கீன், ஜனநாயக ரீதியில் பார்க்கும்போது, இது மிகப் பெரிய சவாலாக அமைவதாகவும் கூறினார்.

இது தொடர்பில் தமிழ்மிரருக்கு தொடர்ந்துரைத்த அவர், தேர்தல் ஆணைக்குழுவானது, எப்படியாவது தேர்தலை நடத்தியே தீரவேண்டுமென நிற்பதாகவும் சாடினார்.

கொரோனா வைரஸின் இரண்டாவது அலை தொடர்பான அச்சம் தற்போது உருவாகியுள்ள இந்நிலையில், தேர்தல் நடவடிக்கைகளின் போது பின்பற்ற வேண்டிய சுகாதாரப் பரிந்துரைகளை வர்த்தமானி ஊடாக வெளியிடப்படாமல் இருப்பதற்கான முழுப் பொறுப்பையும், சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாரச்சியே ஏற்க வேண்டுமெனவும், அவர் கூறினார்.

இந்த வர்த்தமானி வெளியிடப்படாமல் இருப்பதற்கான பின்னணியில், அரசாங்கத்தின் சதித் திட்டங்கள் இருக்கலாமெனச் சந்தேகிப்பதாகத் தெரிவித்த அவர், ஆளுங்கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அனைத்தையும் நிறைவு செய்துகொண்டு, இறுதி வாரமளவில் சுகாதாரப் பரிந்துரைகள் தொடர்பான வர்த்தமானியை வெளியிட சுகாதார அமைச்சர் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கூறினார்.

அத்துடன், இராஜாங்கனை தேர்தல் தொகுதியில், தபால்மூல வாக்களிப்பு ஒத்திவைக்கப்பட்டதைப் போன்று, தேர்தல் தினத்தன்றும் இவ்வாறான நிலை ஏற்படுமாயின், வாக்களிப்பு வீதம் குறைவடையுமெனவும் இதன்போது, சரியான பிரதிநிதிகளை மக்களால் தேர்ந்தெடுக்க முடியாமல் போகுமெனவும், அஹமட் மனாவ் மக்கீன் கூறினார்.

> **சுகாதாரப் பரிந்துரைகளை வர்த்தமானி ஊடாக வெளியிடப்படாமல் இருப்பதற்கான முழுப் பொறுப்பையும், சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாரச்சியே ஏற்க வேண்டும்**

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றும் வாக்காளர்கள், வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லமாட்டார்களெனத் தெரிவித்த அவர், இவ்வாறு வாக்காளர்கள் செல்லாவிடின், விழுமியங்கள் அற்றவர்களின் வாக்குகள் ஊடாக விழுமியமற்ற மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுமெனவும் கூறினார்.

பின்னர், 4, 5 வருடங்களுக்கு, இவர்களைத் தெரிவு செய்ததன் பலனை மக்கள் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படுமெனவும் எனவே, சுகாதாரப் பரிந்துரைகளை உடனடியாக வர்த்தமானியில் வெளியிட வேண்டுமெனவும், அஹமட் மனாவ் மக்கீன் வலியுறுத்தினார்.

போதைப்பொருள் வர்த்தகம்:

## நால்வரிடம் சாட்சியம் பதிவு

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில், 4 சுயாதீன சாட்சியாளர்கள், கொழும்பு பிரதான நீதவானிடம் இரகசிய வாக்குமூலத்தை வழங்கியுள்ளனர்.

குறித்த வர்த்தகம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அந்தப் பணியகத்தில் பணியாற்றும் பொலிஸார் அதிகாரி உள்ளிட்ட 12 பேர் தொடர்பாகவே, இவ்வாறு சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை, கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்னவின் உத்தியோகபூர்வ அறையில் வைத்து, சுமார் ஒன்றரை மணிநேரத்துக்கும் மேலாக அவர்களிடம் இரகசிய வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

> **சுமார் ஒன்றரை மணிநேரத்துக்கும் மேலாக அவர்களிடம் இரகசிய வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது**

இச்சம்பவம் தொடர்பில், இந்த 4 நபர்களும் தாங்கள் அறிந்த தகவல்களை வெளியிடுவதற்கு, தமது உத்தியோகபூர்வ அறையில், செவ்வாய்க்கிழமை (14) காலை முன்னிலைப்படுத்துமாறு, கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு, நேற்று முன்தினம் (13) உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் சாட்சியாளர்கள் ஆஜர்படுத்தப்பட்டு, வாக்குமூலம் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வேட்பாளர்களால்

## ‘பொதுச் சொத்துகளுக்கு நாசம் விளைவிப்பு’

### பொதுமக்கள் பாடம் புகட்டவேண்டும் என்கிறார் நிரோஷ்



“தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடும்போது, பொதுச் சொத்துகளையும் சூழலையும் பாதுகாப்பதில் வேட்பாளர்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். பிரசாரம் என்ற போர்வையில், எமது பிரதேசத்தை நாமே அழித்துவிடக் கூடாது” என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சிலர், பொதுச் சொத்துகளை நாசம் செய்யும் வகையிலும் சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் வகையிலும் செயற்படுகின்றனர் எனச் சாடினார்.

இது, சட்டம், ஒழுங்கு நடவடிக்கைக்குப் புறம்பான காரியமெனச் சுட்டிக்காட்டிய அவர், பொது ஸ்தாபனங்கள், மதில்களிலும் கண்டபடி சுவரொட்டிகளை ஒட்டுகின்றனர் எனவும் பொது வீதிகளில் தமது கட்சியின் சின்னம், விருப்பு இலக்கம் போன்றவற்றை வர்ணப்பூச்சுக்கொண்டு எழுதிவிட்டுச் செல்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

“வீதிகளில் எழுதுவோர், பயணிகளின் உயிருடன் விளையாடுகின்றனர். அரச சொத்துக்கு இழப்பை ஏற்படுத்தி, மக்களின் வரிப்பணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளை நாசம் செய்கின்றனர். வீதிகளின் பெயர்ப்பலகைகள், திட்டங்களின் பெயர்ப் பலகைகளை மறைத்து, வேட்பாளர்களின் படங்களை ஒட்டுகின்றனர்.

“தேர்தலில் வெற்றிபெற்று பிரதேசத்தை அபிவிருத்தி செய்வோம் என்று கூறும் சிலர் மேற்கொள்ளும் இவ்வாறான அரசியலால், ஒட்டுமொத்த அரசியல்வாதிகளுக்கும் அவமானமாகும். இவற்றில் கணிசமானவற்றைப் பொலிஸார் அகற்றி வருகின்றனர். இவற்றை அகற்றுவதற்கும் நாட்டில் பெரும் நிதிச் செலவு ஏற்படுகின்றது” என்றார்.



### மகளிர் அமைப்பு அங்குரார்ப்பணம்...

ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அமைப்பான “சமகி வனிதா பலவேகய” (ஐக்கிய மகளிர் சக்தி), கொழும்பு – தாமரைத் தடாகத்தில் வைத்து, அதன் தலைவர் சஜித் பிரேமதாசவால் நேற்று முன்தினம் (13) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

7,458 வேட்பாளர்களில்

## ‘819 பேர் மாத்திரமே பெண்கள்’

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது ஒவ்வொரு பெண்ணினதும் பொறுப்பு என, கஃபே அமைப்பின் பணிப்பாளர் சுரங்கி ஆரியவன்ச தெரிவித்தார்.

தேர்தல் செயற்பாட்டில் பெண்களின் பங்களிப்பு குறித்த பயிற்சிப்பட்டறையில் நேற்று (14) கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், இம்முறை வேட்பாளர் பட்டியல்களைத் தயாரித்தபோது, அனைத்து அரசியல் கட்சிகளும் பெண்களின் பிரதிநிதித்துவத்துக்கு குறிப்பிடத்தக்களவு வாய்ப்பை வழங்கவில்லையென சுட்டிக்காட்டினார்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் 7,458 வேட்பாளர்களில், 819 பேர் மட்டுமே பெண்களாக உள்ளனரென, சுரங்கி ஆரியவன்ச இதன்போது தெரிவித்தார்.

நாட்டின் அனைத்து பிரதான அரசியல் கட்சிகளின் முடிவெடுக்கும் அதிகாரம் ஆண்களுக்கு மட்டுமே வழங்கப்படுவதாகத் தெரிவித்த அவர், இதன்காரணமாக, தற்போதைய அரசியல் அரங்கில் பெண்களுக்கு பொருத்தமான இடம் வழங்கப்படவில்லை என்றும் கூறினார்.



பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்களைத் தயாரித்தபோது அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களிடமும் பகிரங்கமாக இதுதொடர்பாக வேண்டுகோள் விடுத்ததாகக் குறிப்பிட்ட அவர், எனினும், அந்தக் கோரிக்கைகளை கருத்திற்கொள்ளவில்லை என்பது வேட்பாளர்களின் இறுதிப் பட்டியலில் இருந்து தெளிவாகிறது எனவும் தெரிவித்தார்.

சிக்கலான பிரதேசங்களுக்கு

## ‘வாக்குச் சீட்டுகள் விநியோகம் இடைநிறுத்தம்’



சுற்றுலாத் தடை விதிக்கப்பட்டுள்ள பகுதிகள், தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள வீடுகள் ஆகியவற்றுக்கு, வாக்குச் சீட்டுகளை விநியோகிக்கும் நடவடிக்கையைத் தற்காலிகமாக இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளதாக, தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன, நேற்று (14) தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுகளை விநியோகிக்கும் பணிகள், நேற்று முன்தினம் (13) ஆரம்பமானதாகவும் இந்நிலையில், சுற்றுலாத் தடைக்கு உட்பட்ட பகுதிகள், தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள வீடுகள் ஆகியவற்றுக்கு வாக்குச் சீட்டுகளை விநியோகிக்கவில்லை எனவும் கூறினார்.

சுகாதார அமைச்சின் மீள் அறிவித்தல் கிடைக்கும் வரையில், இப்பகுதிகளுக்கான வாக்குச் சீட்டுகள் விநியோகிக்கும் பணிகள் இடம்பெறமாட்டதெனத் தெரிவித்த அவர், சுகாதார அமைச்சின் மீள் அறிவித்தல் கிடைத்தவுடன், இந்தப் பகுதிகளுக்கான வாக்குச் சீட்டுகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமெனவும் கூறினார்.

சு.காவுக்கு அபகீர்த்தி: பிரசன்ன உள்ளிட்டோருக்கு எதிராக

## ‘வழக்குத் தொடர்வதற்குத் தீர்மானம்’

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு அபகீர்த்தி ஏற்படுத்திய குற்றச்சாட்டில், அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு, கட்சித் தலைமையகம் தீர்மானித்துள்ளதாக, ஸ்ரீ லங்கா சுதந்திர சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி பந்துல வெல்லால தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில், நேற்று (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமாயின், அது தொடர்பில் அமைதிகாக்க முடியாதென்றார்.

இந்நிலையில், அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உள்ளிட்ட தரப்பினர், சுதந்திரக் கட்சிக்கும் தலைவருக்கும் தொடர்ந்து அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையிலான பிராசாரங்களும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுவதால், அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்குத் தீர்மானித்துள்ளதாகவும், அவர் கூறினார்.

# ‘பொது விடுமுறை அறிவிக்கப்படாது’

## வதந்திகளைப் பரப்புவோருக்கு எதிராக நடவடிக்கை

தற்போது நாட்டில் காணப்படும் அசாதாரண சூழ்நிலையில், பொது விடுமுறையொன்றை அறிவிப்பதாக வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லையென அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில்,

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, நாட்டிலுள்ள பல்வேறு நிறுவனங்களைப் பூட்டிவிடப்போதாக உண்மைக்குப் புறம்பான தகவல்கள் வெளியிடப்படுகின்றனவென அந்தத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தோடு இந்த நிலைமைகளுக்கு மத்தியில் ஊரடங்குச் சட்டத்தை அமல்படுத்தி, பொது விடுமுறையை அறிவிக்கப் போவதாக வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லையென்றும் அது தொடர்பாக அரசாங்கம் இதுவரையில் எந்தவொருத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு போலி பிரசாரங்களால் மக்கள் நெருக்கடிக்கு ஆளாகுவர் என்தால் இவ்வாறான செய்திகளை பரப்புவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு, உரிய அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதெனவும் அத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## ‘மொட்டின் ஆட்சியை முடக்கிவிடுங்கள்’

கொரோனா பரவுகிறதென கூறிக்கொண்டு நாட்டிலுள்ள சகல துறைகளும் முடக்கப்பட்டு வருகின்றதெனத் தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அதனால் நாட்டை முழுமையாக முடக்கும் நிலைமை வருவதற்கு முன்பாக மொட்டின் அரசாங்கத்தை முடக்கிவிடுமாறும் கோரிக்கை விடுத்தார்.

பியகம தேர்தல் தொகுதியில் நடைபெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர்,

கொரோனா பரவ ஆரம்பித்த காலத்தில், ஐக்கிய தேசிய கட்சி முன்வைத்த கோரிக்கைகளை அரசாங்கம் பொருட்படுத்தவில்லை எனவும் கொரோனாவை வெற்றிக்கொண்ட பெருமையை தக்கவைத்துக்கொண்டு தேர்தலை வெல்லவே அரசாங்கம் முயற்சித்ததாகவும் சாடினார்.

ஐ.தே.கவின் கோரிக்கையை ஏற்று நாளாந்தம் 5 ஆயிரம் பிசிஆர் பரிசோதனைகளை செய்ய கோரியிந்ததெனத் தெரிவித்த அவர், அவ்வாறு பரிசோதனைகளை செய்திருந்தால் இன்று பாரதூரமான நிலை வந்திருக்காதெனவும் தெரிவித்தார்.

அதேபோல், தனிமைப்படுத்தல், போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்பவற்றை அரசாங்கம் நிறைவேற்ற தவறிவிட்டதெனவும் சுமந்திரனின் உதவியுடன் சட்டமூலங்களை தயாரிக்குமாறு தான் முன்வைத்த கோரிக்கைகளையும் அரசாங்கம் கண்டுகொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.



அதனால், ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சி அமைக்கப்பட்டால் முதல் கடமையாக மேற்படி சட்டமூலங்கள் நிறைவேற்றப்படுமெனத் தெரிவித்த அவர், தேசிய கொள்கைகளை உருவாக்கும் இயலுமைகளைக் காண்பித்து அரசியல் களத்தில் போட்டியிடும் கலாசாரம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்றார்.

யுத்த காலத்தில்கூட இலங்கையில் தொழில்வாய்ப்புகள் அற்றுப்போகவில்லை எனத் தெரிவித்த அவர், மொட்டின் ஆட்சியிலேயே தொழில்வாய்ப்புகள் இல்லாத நிலைமை உருவாகி வருகின்றதெனவும் தெரிவித்தார்.

அதேநேரம் ஐ.தே.க தலைமையகமான சிறிகொத்தவில் அவர் நடத்தியிருந்த விஷேட உரையொன்றில், மொட்டுக் கட்சியின் அரசாங்கம் தேர்தலை இலக்குவைத்து மாத்திரமே செயற்படுகின்றதெனவும் சாடினார்.

அத்தோடு, கொரோனா அச்சுறுத்தலை வெற்றிகொள்வோமெனக் கூறிக்கொண்டு பொருளாதார வீழ்ச்சிக்கு அரசாங்கம் இடமளித்திருந்ததெனத் தெரிவித்த அவர், தற்போது பொருளாதாரத்தை மீட்க முடியாமல் தவிக்கின்ற நிலையில் கொரோனா மறுமுறையும் தலையெடுத்துள்ளதெனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டா

## ‘பௌத்தர்களுக்கு மாத்திரம் ஜனாதிபதியல்ல’

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, பௌத்தர்களுக்கு மாத்திரம் ஜனாதிபதியல்ல சகல இன மக்களுக்கும் அவரே ஜனாதிபதி என்பதை புரிந்துகொள்ள வேண்டும்” என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் கலாநிதி வி.ஜனகன் தெரிவித்தார்.

கொழும்பு - விவேகானந்தா மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், மதங்களை வைத்து நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய அதிகார வர்க்கத்துக்கு எதிராக போராட வேண்டிய தேவைப்பாட்டில், தமிழ் பேசும் சமூகம் தற்போது தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அதேவேளை, நாட்டு மக்கள் அனைவரும் தமிழர்களாக, சிங்களவர்களாக, முஸ்லிம்களாக, கிறிஸ்தவர்களாக ஒன்று சேர வேண்டிய காலகட்டத்தில் இருப்பதாகவும், அதிகார வர்க்கத்தினருக்கு இம்முறை தேர்தலில் முறையான பாடத்தை கற்பிக்க வேண்டிய தேவை வாக்காளர்களுக்கு இருப்பதாகவும் தெரிவித்தார்.

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ ஆட்சிபீடம் ஏறிய பின்னர், தான் சிங்கள பௌத்த வாக்காளர்கள் மூலமே வெற்றிபெற்றதாகக் தெரிவித்தார். ஜனாதிபதி ஒருவருக்கு சிங்களவர்களும்



தமிழ்பேசும் மக்களும் வாக்களிக்க முடியும். அதில் எந்தவிதத் தவறும் கிடையாது. ஆனால், அவர் நாட்டின் அதிபராக பதவியேற்றதன் பின்னர், சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் ஜனாதிபதியல்ல, நாட்டில் இருக்கும் அனைத்து இன, மத பிரிவுகளைச் சார்ந்த மக்களின் தலைவராகவே கருதப்படுவார்” என்றார்.

## ‘ரணிலுக்கு பதிலளிப்பதால் நேரம் வீணாகிறது’

கொரோன அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வேலைத்திட்டத்துக்காக 4,200 பில்லியன் ரூபாய் கிடைத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிடுகிறாரெனத் தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி, ரணிலுக்கு பதிலளித்து நேரத்தை வீணடிக்க தான் விரும்பவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, உலக சுகாதார ஸ்தாபனம், ஐரோப்பிய சங்கத்திடமிருந்து கொரோனா ஒழிப்பு வேலைத்திட்டத்துக்காக, அரசாங்காத்துக்கு நிதி கிடைத்ததாக கூறியுள்ளமைக்குப் பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சரியானத் தரவுகளுடன் கேள்விகளைக் கேட்பதற்குத் தெரிந்துகொள்ள வேண்டுமெனவும் 4,200 பில்லியன் ரூபாயை உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து அரசாங்கம் பெற்றுக்கொண்டதாக அவர் உண்மைக்குப் புறம்பானத் தகவலை வெளியிட்டிருந்தாரெனவும் தெரிவித்தார்.

உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே அரசாங்கத்துக்குக் கிடைத்திருந்ததெனத் தெரிவித்த அவர், உலக சுகாதார ஸ்தாபனமும் உலக வங்கியும் இரு வேறு நிறுவனங்கள் என்பதை ரணில் அறிந்துகொள்ள வேண்டும் என்றார்.

உலக வங்கியிடமிருந்து இலங்கைக்கு 128 மில்லியன் ரூபாய் மாத்திரமே கிடைத்திருந்ததெனவும் அந்தத் தொகை மூன்று வருடங்களுக்காக பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளதால், இவ்வருடத்துக்காக 22 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து அரசாங்கத்துக்கு பணம் கிடைக்கவில்லை எனத் தெரிவித்த அவர், இது தொடர்பாக ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க இனிவரும் நாள்களில் தன்னிடத்தில் கேள்விகளை எழுப்பாமல் இருப்பதே சிறந்தென்பதோடு, அவருக்கு பதிலளித்து நேரத்தை வீணடிக்க தான் விரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.



## ‘பதிலளிக்காவிடின் அவரே முட்டாள்’

மக்களுக்கு உரியவகையில் பதிலளிக்க முடியாவிடின் அவரை முட்டாளாகவே நாம் பார்க்க வேண்டுமென, திவுலபிட்டிய பிரதேச சபையின் பொதுஜன பெரமுன உறுப்பினர் நந்தன பெர்ணான்டோ தெரிவித்தார்.

எங்களுடைய அமைச்சர், 2011 உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதிப்போட்டியில் ஆட்டநிர்ணய சதி இடம்பெற்றுள்ளதாகக் கூறியமையை ஏற்றுக்கொள்ள முடியாது. கண்டி மாவட்ட மக்களுக்கு அவர் உரிய பதிலளிக்கவேண்டும் என்றார்.

பதில் தலைவர் இந்திக ஜயசிங்ஹ (ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன) தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர்,

“இது கிரிக்கெட் விளையாட்டில் ஒரு



கருப்பு அடையாளத்தை ஏற்படுத்தியது. ஆகையால், கிரிக்கெட் குழுவுக்கு எமது வருதத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்” என்றார்.

சங்கக்காரரர் யார் என்று எனக்குத் தெரியும். அவர் தனது தவறுகளை தாழ்மையுடன் ஒப்புக்கொள்ளும் நபர் எனத் தெரிவித்த அவர், கருணா கதவைத் திறக்க முயன்றனர். ஆனால், சங்காவுக்கு அவ்வாறு செய்யமுடியாமல் போய்விட்டது என்றார்.

## ‘எனது பெறுமதியை பலர் மறந்துவிட்டனர்’

உலகின் முக்கியமான தலைவர்களுடன் இப்போது வேண்டுமானாலும் தன்னால் தொடர்பு கொள்ளமுடியுமெனத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொலன்னறுவை மாவட்ட வேட்பாளருமான மைத்திரிபால சிறிசேன, என்னுடைய பெறுமதியை, இந்த மாவட்டத்திலுள்ள பலரும் மறந்துவிட்டனர் என்றார்.

“தான், ஜனாதிபதியாகப் பதவிவகித்த காலத்தில், அறிமுகமான அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் சீன ஜனாதிபதி ஜின் பின் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பை வைத்திருந்தேன். அந்தத் தொடர்பு இன்னும் பேணப்படுகின்றது“ என்றார்.

அந்த தலைவர்களுடன் எந்தநேரத்திலும் தொடர்பு கொள்ளமுடியுமெனத் தெரிவித்த மைத்திரிபால சிறிசேன, அவ்வாறான நபரின் பெறுமதியை, பொலன்னறுவையைச் சேர்ந்த பலரும் மறந்து செயற்பட்டுகொண்டிருக்கின்றனர் என்றார்.

## முரளிக்கு மனோ பதிலடி

கொழும்பில், தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாது ஒழிக்க ஒப்பந்த அடிப்படையில் முத்தையா முரளிதரன் செயற்படுவதாகத் தெரிவித்துள்ள கொழும்பு மாவட்ட வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான மனோ கணேசன், தன்னுடைய சக கிரிக்கெட் வீரர்களுக்காக வாய் திறக்காத முரளி, தற்போது விமலுக்காக வாய் திறந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள மனோ கணேசன், “கொழும்பில் தமிழர்கள் எனக்கு வாக்களிக்க வேண்டாமென, இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் கூறியுள்ளார். இவருக்கு புத்தி மட்டு என ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களுக்கும் தெரியும் என்பதால், இவருக்கு நான் பதில் கூற விரும்பவில்லை” எனவும் கூறியுள்ளார்.

“முரளிதரனுடன் கிரிக்கெட் அணியில் ஒன்றாய் விளையாடிய சக வீரர்களான குமார் சங்ககார, மஹேல ஜயவர்தன ஆகியோர் சமீபத்தில் அநியாயமான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி இருந்தபோது, முழு நாடுமே அவர்களுக்காக குரல் கொடுத்தது. ஆனால் அப்போது வாயைத் திறக்காத முரளி, இப்போது தன் பிழைப்புக்காக அரசியல்வாதி விமல் வீரவன்சவுக்கு வாய் திறந்துள்ளார்” என்றார்.



## ‘கிருமி தொற்று நீக்கவே மொபிடெல் கிளை மூடப்பட்டது’

கிருமி தொற்று நீக்கம் செய்வதற்காகவே, கொழும்பு 02, W.A.D. இராமநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள மொபிடெல் கிளை தற்காலிகமாக மூடப்பட்டதாக, மொபிடெல்(பிரை) லிமிட்டட் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி நளின் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 காரணமாக, கொழும்பு 02இல் அமைந்துள்ள மொபிடெல் அலுவலகம் மூடப்பட்டுள்ளதாக, சமூக வலைதளங்களில் செய்திகள் வெளியான நிலையில், அது தொடர்பில் விளக்கமளித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ள அவர், கொவிட் 19 நோயாளியுடன் தொடர்புடையவர் என கருதப்படுபவருடன் பழகியவர், (மூன்றாவது குழு), கொழும்பு 02, W.A.D. இராமநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள மொபிடெல் கிளைக்கு வருகை தந்திருந்தார் என்று ஏற்பட்ட சந்தேகத்தின் காரணமாக, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அக்கிளைத் தற்காலிகமாக மூடப்பட்டு முழுமையாக கிருமி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், இவ்வாறான சூழ்நிலையைக் கையாள்வதில், சுகாதார அமைச்சு, அதனுடன் தொடர்புடைய அரச அதிகாரிகள் வகுத்துள்ள வழிகாட்டல்களை தாம் ஏற்கெனவே நடைமுறைப்படுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

“தற்செயலாக ஏற்படும் இவ்வாறான சந்தர்ப்பங்களில், எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதுத் தொடர்பாக, எமது அனைத்து ஊழியர்களும் அறிவூட்டப்பட்டுள்ளனர். அத்தோடு அதற்காக எடுக்கப்பட வேண்டிய தேவையான நடவடிக்கைகளுக்கும் அனைத்து மொபிடெல் நிலையங்களும் தயார் நிலையில் உள்ளன” எனத் தெரிவித்துள்ளார்.

## ‘வேட்பாளர்களுக்கு பாரபட்சம்; திருத்த நடவடிக்கை எடுக்கவும்’

### ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு தேசப்பிரிய கடிதம்

ஆணைக்குழுவில் அளிக்கப்பட்ட சாட்சியம், பொதுவெளியில் பேசப்படுமாயின், அது வேட்பாளர்களுக்கு பாரபட்சமாக அமையுமென குறிப்பிட்டுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, அவ்வாறானதோர் அறிவிப்பை திருத்த முடியுமாயின்,

திருத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

“தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், ஆணைக்குழுவில் அளிக்கப்பட்ட சாட்சியத்தை பொதுவெளியில் கூறுவது, வேட்பாளர்கள் சிலருக்கு பாரபட்சத்தை ஏற்படுத்தும். தேர்தல் சட்டத்தின் பிரகாரம், அவ்வாறு கூறமுடியாது. அது பாரபட்சமானதாகும்” என்றார்.

வேட்பாளர்களுக்கு பாரபட்சத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்ளாமல் இருப்பதற்கான இயலுமை இருக்கின்றதா என்பது தொடர்பில் தேடியறியுமாறு அக்கடிதத்தின் ஊடாக, அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொண்டுள்ள அவர், இயலுமை இருக்குமாயின் அதனை திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

# நாவடக்கம் என்பது அனைவருக்கும் பொதுவானது...

‘யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு’ என்பது திருக்குறள். ‘எதைக் காக்க முடியாதவரானாலும் நா ஒன்றையாவது காத்துக்கொள்ள வேண்டும். முடியாது போனால் சொற்குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்’என்பது, அக்குறளுக்கான பொருளாகும். வள்ளுவரின் இக்கூற்று, இன்றைய அரசியல்வாதிகளுக்கு நன்கு பொருந்தும். பலர், தங்களின் நாவைக் காக்க மறப்பதாலேயே, பல்வேறு சிக்கல்களில் மாட்டிக்கொள்கின்றனர்.

ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்குப் பின்னர், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளராகப் பதவியேற்று, நுவரெலியா மாவட்டத்தில் மக்களிடம் வாக்குக் கேட்டுப் படியேறி, இறங்கும் ஜீவன் தொண்டமான், ‘கண்ட கண்ட நாய்க்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை’ என, மக்கள் மத்தியில் உரையாற்றும்போது தெரிவித்திருக்கிறார். அரசியலில் அரிச்சுவடி கற்றுக்கொண்டிருக்கும் ஜீவன் தொண்டமான், இப்போதே இப்படி எடுத்தெறிந்து பேசத் தொடங்கினால், எதிர்காலம் அவரைக் காறித்துப்பும் என்பதை மறந்துவிடக் கூடாது.


தாங்கள் மக்கள் பிரதிநிதிகள் என்பதை ஒருபோதும் அரசியல்வாதிகள் மறந்துவிடக்கூடாது. மக்களின் வாக்குகளின்றேல் அரசியல் அரியாசனம் கனவிலும் கிடைக்காது. இதுதான் யதார்த்தம். வாக்குப் போட்ட மக்களுக்கு மாத்திரமன்றி, அம்மக்களோடு வாழும், அம்மக்களின் நலன்களைச் சிந்திக்கும் ஒவ்வொருவருக்கும் பதில்சொல்லவேண்டிய கடப்பாடு, அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும் இருக்கிறது. அதைவிடுத்து, ‘கண்டகண்ட நாய்கள்’ என விழிப்பதற்கு வெட்கப்படவேண்டும்.

நாயாக இருந்தாலும், வாக்களிக்கும் மக்களின் சொத்தாக அது இருந்தால், அதற்கும் பதில்சொல்லித்தான் ஆகவேண்டும். ஆகவே, கண்டகண்ட நாய்களுக்குப் பதில் சொல்லமாட்டேன் என்று சொல்லிக்கொண்டு, அம்மக்களிடமே வாக்குக் கேட்டுப் போகக்கூடாது. அரசியல் நாகரிகம் என்பது வெறும் வார்த்தையோடு மாத்திரம் நின்றுவிடக்கூடாது; அது உணர்வோடு கலந்திருக்க வேண்டும். அந்த உணர்வுதான், மக்களுக்கான உண்மையான குரலாக ஒலிக்கும்.

இத்தகைய நாவடக்கம் இல்லாத காரணங்களால், இன்று பல அரசியல்வாதிகள் சிக்கிச் சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறார்கள். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் 75 வாக்குகளை, ஒரே தடவையில் போட்டிருக்கிறேன் என்று சொல்லிய விவகாரம், இன்று பொலிஸாரின் விசாரணை வரை சென்றிருக்கிறது. ஆகவே, எந்த விடயத்தை, எவ்விடத்தில் பேசுகின்றோம் என்பதை, மிக அவதானமாக அறிந்து வைத்திருக்க வேண்டும். அவ்வாறின்றி, பொதுவெளியில் தம் நா காக்க அரசியல்வாதிகள் மறந்தால், மக்களும் தங்களுக்கு வாக்களிப்பதை மறப்பர் என்பதை அரசியல்வாதிகள் நினைவிற்கொள்க.

தமிழ்Mirror www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD, COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6, 011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER (DIR.) 011 2 479 822, 077 3421 476
CIRCULATION MANAGER (DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER (DIR.) 2 479 626, 2 479 628, 077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

சீறிடும் சினம், ஒருவரைத் தன்னிலை மறந்த நிலையில் சிறை வைத்துவிடுகின்றது. அதனுள் புகுந்தவர்கள் எவரைப் பற்றிய கரிசனையும் இல்லாமல், ஆணவத்தின் உச்ச நிலையில் செயற்படுவார்கள். பிறரைக் குற்றம் சொல்பவர்கூட, தனது கோபமான தோற்றம் பற்றிக் கடுகளவும் நினைப்பதேயில்லை. அறிவை மயக்கும் மனஸ்தாபம், பொசுக்கப்பட வேண்டிய விடயமாகும்.

ஒருவரைப் பிடிக்காவிட்டால், அது பற்றிய விடயத்தை மனத்துக்குள் வைத்துக் குமுறக்கூடாது. பல நாள்கள் சேர்த்து வைத்த குரோதங்கள் இறுதியில் சுவாலையாக, தன்னைத் தானே எரிக்கும் ஆவேசமாக உருமாறி விடுகின்றது. கோபம் வீரம் அல்ல; இது மிகப் பெரிய பலவீனம். ஆனால், பலர் தாங்கள் ரோசக்காரன் என நிரூபிக்கக் கோபங்களை ஆயுதமாகக் கொள்கின்றார்கள். கோபாவேசத்தைப் பேரன்பு நிலை அடக்கி ஆளும். கோபம் தனக்குத்தான் எதிரி.

-பருத்தியூர் பாலவயிரவநாதன்

தமிழ்த் தேசிய கட்சிகள்

# கேட்க வேண்டிய குரல்கள்



புருஜோத்தமன் தங்கமயில்

அண்மையில், ‘ஈழத்தமிழ் அரசியல்- நேற்று இன்று நாளை’ எனும் தலைப்பில், இணையவழிக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த (கலாநிதி பட்டத்துக்கான ஆய்வு மாணவர்) சட்டத்தரணி சிவகுமார் நவரெத்தினம் முன்வைத்த கருத்துகள், கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாக இருந்தன. அதுவும், தேர்தல் அரசியல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், தமிழர் அரசியல் பரப்பு பெரிதாக கவனத்தில் கொள்ளாத விடயங்கள் பற்றி, தன்னுடைய ஆதங்கத்தை அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

அதில் ஒரு பகுதி, பருமட்டாகக் கீழ்கண்டவாறு இருந்தது, “...அம்பாறை மாவட்டத்தில், தமிழ் மக்கள் வாழ்கிறார்கள் என்கிற எண்ணம், ஈழத்தமிழ் மக்களிடம் இருப்பது குறைவு; புலம்பெயர் நாடுகளில் பலரும், ‘அம்பாறையில் தமிழ் மக்கள் வாழ்கிறார்களா’ என்று, என்னிடம் கேட்டிருக்கிறார்கள். ஏன், கொழும்பில் கூட, தமிழ் நீதிபதி ஒருவரின் மனைவி, என்னிடம் அப்படியான கேள்வியை எழுப்பியிருக்கிறார். தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளில், அம்பாறை போன்ற மாவட்டங்களின் பிரச்சினைகள், மிகவும் கவனத்தோடு நோக்கப்பட வேண்டியவை. ஏனெனில், வடக்கு எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் காட்டிலும், அம்பாறையின் பிரச்சினைகள் வித்தியாசமானவை...”

ஈழத் தமிழர் அரசியல் என்பது, யாழ்ப்பாணத்துக்குள் மய்யப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலையே தொடர்ச்சியாகப் பேணி வந்திருக்கின்றது. அப்படியான நிலையில், அம்பாறை போன்ற பேரினவாத ஆக்கிரமிப்பால் 70 ஆண்டுகளுக்கும் மேலாகச் சூறையாடப்பட்ட பகுதிகளில் வாழ்கின்ற பூர்வீகக் குடிகளான தமிழ் மக்களின் குரல்கள், பெரிதாகக் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

தமிழ்த் தேசிய அரசியல், யாழ்ப்பாணத்தின் சிந்தனைகளில் இருந்துதான், தீர்மானங்களை எடுக்கின்றது. அது, அம்பாறை, மட்டக்களப்பு போன்ற மாவட்ட மக்களின் கருத்துகளை, தேவைகளை பெரியளவில் உள்வாங்குவதில்லை. கட்சி அரசியலின் சார்பில், அவற்றுக்கான முக்கியத்துவம் வழங்கப்பட்டாலும், அதற்கும் அப்பாலாகப் பேணப்பட வேண்டிய அந்த நிலப்பகுதியினதும் மக்களினதும் விடயங்கள் பேசுபொருளாவதில்லை.

அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்துவதுதான், தமிழ்த் தேசிய அரசியலின் பிரதான இலக்கு. அதில், மாற்றம் செய்யப்பட வேண்டிய தேவை இல்லை. ஆனால், அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்தும் போராட்டங்களோடு, ஒவ்வொரு நிலப்பரப்பும் கொண்டிருக்கின்ற தனிப்பட்ட இயல்பை உள்வாங்கி, அதற்கு ஏற்பவும் திட்டங்களை வகுத்துச் செயற்பட வேண்டிய அவசியம், தமிழ்த் தேசிய அரசியல் பரப்புக்கு உண்டு.

யாழ். மாவட்டத்தில் சுமார் 99 சதவீதமான மக்கள் தமிழர்கள். ஆனால், அம்பாறை போன்ற மூவின மக்களும் வாழும் மாவட்டத்தில், தொகை அடிப்படையில் சிறுபான்மையாகவுள்ள தமிழ் மக்களின் அரசியல் என்பது, நீண்ட காலத்திட்டங்களை மாத்திரமல்லாமல், நாளாந்த வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட இருப்பைப் பாதுகாப்பதற்கான விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும்.

அதிக தருணங்களில், அம்பாறையில் இருந்து நாடாளுமன்றத்துக்கான ஒரு தமிழ் பிரதிநிதித்துவத்தைத் தக்க வைப்பதே, பெரும் போராட்டமாக மாறிவிட்டது. அப்படியான நிலையில், நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்வதையே பெரும் சாதனையாகத் தமிழ்த் தேசிய கட்சிகள் இன்று கருதத் தொடங்கிவிட்டன.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பு, ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த காலத்துக்கும் இன்றுள்ள நிலைக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. ஆயுதப் போராட்டம் சில குறிக்கோள்களுக்காக, சில விட்டுக்கொடுப்புகளைச் செய்யும். அது உலகம் பூராவும் நிகழ்வதுதான்.

ஆனால், ஆயுதப் போராட்டத்துக்கு அப்பாலான இயங்கு நிலை என்பது, பிரதான அரசியல் இலக்கோடு, மக்களின் நாளாந்த வாழ்க்கை குறித்துக் கவனம் செலுத்த வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. தமிழீழத்துக்கான வரைபடத்தின் தென் கிழக்குப் பகுதியிலுள்ள அம்பாறை தொடர்பில், ஈழத் தமிழர்களிடம் காணப்படுகின்ற சந்தேகங்கள் குறித்து, சட்டத்தரணி சிவகுமார் நவரெத்தினம் முன்வைக்கும் கருத்துகள், தமிழ்த் தேசிய அரசியல் பரப்பு, எவ்வாறு ஓரிடத்துக்குள் தரித்து நிற்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளப் போதுமானது. ஒரு சிலர் எழுப்பிய சந்தேகத்தை வைத்துக் கொண்டு, அம்பாறை தொடர்பிலான தமிழ் மக்களின் நிலைப்பாட்டைக் கேள்விக்குள்ளாக்குவது தவறு என்கிற விமர்சனங்கள் எழலாம். ஆனால், 70 ஆண்டுகளுக்கும் மேலாக வடக்கு, கிழக்கு தாயகத்தைத் தேசமாக, ஒரு கட்டத்தில் தனிநாடாகக் கோரிய தரப்பொன்றுக்குள், இவ்வாறான கேள்விகள் எழுவதே, மிகப்பெரிய பின்னடைவான நிலைதான்.

சரியான புரிதல் என்கிற விடயம், ஏன் மேலெழ வேண்டியிருக்கின்றது என்றால், எண்ணிக்கை அடிப்படையில் இலங்கையில் சிறுபான்மையாக உள்ள தமிழ் மக்களிடையேயும், பிரதேச அடிப்படையில் பெரும்பான்மை- சிறுபான்மை என்கிற நிலைப்பாடுகள் கோலொச்சுகின்றன. அது, அதிக நேரங்களில் எண்ணிக்கை அடிப்படையில், சிறுபான்மையாகவுள்ள மக்களின் கோரிக்கைகளைக் கண்டு கொள்வதில்லை. அவ்வாறான நிலையின் தொடர்ச்சி, தமிழ்த் தேசிய அரசியலுக்கு அப்பாலான சிந்தனை உள்ளவர்களுக்கான இலகுவான பாதைகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

‘கருணா அம்மான்’ என்கிற விநாயகமூர்த்தி முரளிதரன், மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டால், தன்னால் வெற்றிபெற முடியாது என்கிற நிலையைத் தெளிவாகப் புரிந்து வைத்திருக்கிறார். அதுதான், அம்பாறையை நோக்கி ஓடிச் சென்றிருக்கிறார். ‘எங்கும் செல்வோம், எதிலும் வெல்வோம்’ என்கிற அவரது தேர்தல் கால பிரசார வாசகத்தினூடு, அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களிடம் அவர், ஒருவித ‘ஹீரோயிசத்தை’க் காட்ட நினைக்கிறார். இவ்வாறான நிலையொன்று உருவாகும் கட்டத்தை ஏற்படுத்தியமைக்கான பொறுப்பை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

ஏனெனில், பல ஆயிரம் ஏக்கர் காணிகளை, தமிழ் மக்கள் அம்பாறையில் தொடர்ச்சியாக இழந்திருக்கிறார்கள். தங்களைத் தக்க வைப்பதற்கான கோரிக்கைகளில் ஒன்றான தனித் தமிழ் (கல்முனை) பிரதேச செயலக கோரிக்கையும் நிறைவேற்றப்படாமல் கடந்து போயிருக்கின்றது.

அம்பாறையில் எண்ணிக்கை அடிப்படையில் சிறுபான்மையினராகத் தமிழ் மக்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். அப்படியான நிலையில், ஒரு நிர்வாகக் கட்டமைப்பின் அவசியம், அவர்களை மீளக் கட்டமைப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கும். அதனை, கூட்டமைப்பு கடந்த நல்லாட்சிக் காலத்தில், மிகுந்த கவனம் செலுத்திச் செய்திருக்க வேண்டும்.

கிழக்கு மாகாண சபையில், முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியை வழங்கி, நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி ஆட்சியமைத்த கூட்டமைப்பு, கல்முனை விடயத்தை வென்றெடுக்க முடியாத கையாலாகத் தனத்தை வெளிப்படுத்தியது. இது, கல்முனை பிரதேச செயலக விடயத்தில், கூட்டமைப்பு பெரியளவில் அக்கறையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்ற அடிப்படையிலும் நோக்கப்பட வேண்டியது.

கடந்த 11 ஆண்டுகளில், இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்புக்கே தமிழ் மக்கள் ஆணையை வழங்கியிருக்கின்றார்கள். இம்முறையும் அதில் பெரிய மாற்றங்கள் எழுவதற்கு வாய்ப்புகள் இல்லை. ஆனால், பெறுகின்ற ஆணைகளுக்கு அர்ப்பணிப்பாகச் செயற்படுவது சார்ந்த கடப்பாட்டை, இப்போதிலிருந்தாவது அவர்கள் ஆரம்பிக்க வேண்டும்.

ஏனெனில், தேர்தலில் வெற்றிகொள்வதற்கான என்னவிதமான வாக்குறுதிகளையாவது வழங்கிவிடலாம். அதில், எது கூட்டமைப்பால் சாத்தியப்படும், சாத்தியப்படாது என்பதெல்லாம், மக்களுக்கு அத்துப்படி. அவ்வாறான நிலையில், தேர்தல் கால கோசங்களுக்கு அப்பால் நின்று, மக்களின் குரல்களை, மிகவும் கவனத்தோடு காது கொடுக்க வேண்டிய கடப்பாடு கூட்டமைப்புக்கு உண்டு. அது, தமிழ்த் தேசிய அரசியலில், தங்களை நிலைநிறுத்த எத்தனிக்கும் எந்தத் தரப்புக்கும் உண்டு.

மாறாக, யாழ். மய்யவாத ஒற்றைப் புள்ளியில் மாத்திரமே நிற்போம் என்பது, தமிழ் மக்களைப் பிரதேசவாரியாகப் பிளவுபட வைக்கும். தமிழ் மக்கள் ஒப்பீட்டளவில், பெரிய பொறுமையோடு இந்த அரசியலை நோக்கி வருகிறார்கள். அந்தப் பொறுமை என்பது, இயலாமை என்ற ரீதியில்,எ ந்தவொரு தரப்பாலும் கருதப்படக் கூடாது.

இந்தத் தேர்தல் களத்தில், அரசியல் தீர்வு குறித்து மாத்திரமல்ல, சீரழிந்து போயிருக்கின்ற தமிழர்களின் பொருளாதாரம், கல்வி பற்றியெல்லாம் மக்கள் கேள்வியெழுப்புகிறார்கள். ஒவ்வொரு பிரதேசத்தினதும் சிறப்புத் தேவைகள் பற்றி கவனமெடுக்குமாறு, கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. அந்தக் கேள்விகள், கோரிக்கைகள் சார்ந்து, தெளிவான திட்டமிடல்களோடு களத்துக்கு வருமாறு, கூட்டமைப்பையும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸையும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியையும் நோக்கிக் கோரப்பட்டிருக்கின்றது. அதற்கு, சரியான வழியில் பதிலளிப்பதும், செயற்படுவதும்தான் எதிர்பார்க்கப்படும் ஒற்றை அறம். அந்த அறத்திலிருந்து இனியாவது தமிழ் அரசியல் தலைமைகள் தடம்மாறாமல் இருக்க வேண்டும்.

கடிதங்கள்

## தீர்மானத்தையும் மீறிக் கிரவல் அகழ்வு

வவுனியா, கன்னாட்டி பெரியதம்பனைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கிரவல் அகழ்வுப்பணி காரணமாக, நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், பிரதேச மக்கள், பல்வேறு அசௌகரியங்களையும் சந்தித்து வருகின்றனர்.

கிரவல் அகழ்வால், பாரிய குழிகள் ஏற்படுவதால், குளத்துக்கான நீர்வரத்தில் தடையும் ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக, நெற்செய்கையை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

குறித்த கிரவல் அகழ்வுப்பணி இடம்பெறும் பகுதி, நீரேந்து பகுதியாக இருப்பதால், குளத்துக்கு வருகின்ற நீரில் தடையேற்படுவதாக, வெளிக்கள அறிக்கையூடாகத் தெளிவுபடுத்தப்பட்ட நிலையில், அகழ்வுப்பணியைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதாகவும் காலப்போக்கில் திணைக்களத்தின் தேர்ச்சிபெற்ற அதிகாரிகளின் பரிசீலனையின் பின்னர், அனுமதி கொடுப்பதைப்பற்றி மீளாய்வு செய்யலாம் என்று, ஜூன் மாதம் 29ஆம் திகதி நடைபெற்ற அரச அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், குறித்த தீர்மானத்தை மீறி, ஜூலை முதலாம் திகதி முதல் மீண்டும் கிரவல் அகழ்வுப்பணி ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கும் பொதுமக்கள், கமக்காரர் அமைப்பினர் தமக்கு நிலையான ஒரு தீர்வை வழங்குமாறு கோரி, வவுனியா மாவட்ட செயலாளர் சமன் பந்துலசேனவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்திருந்தனர்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட மாவட்ட செயலாளர், கிரவல் அகழ்வுப்பணியை இன்றிலிருந்து இடைநிறுத்துவதாகப் பொதுமக்களுக்கு உறுதிமொழி அளித்தார். எவ்வாறாயினும், இது தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்கப்படுவது முக்கியம்.

-க. அகரன்



# மூன்றில் இரண்டு சாத்தியமா?



எம்.எஸ்.எம். ஐயூப்



வழமையாகத் தேர்தல் காலங்களில், சகல அரசியல் கட்சிகளும் தம்மைத்தாமே பாராட்டிக் கொள்வதோடு, தாமே அத் தேர்தல்களில் வெற்றி பெறுவதாகவும் கூறுவார்கள். சிறு கட்சிகளும் பிராந்தியக் கட்சிகளும், தாம் போட்டியிடும் தொகுதிகளில், பிரதேசங்களில் தாம்தான் வெற்றி பெறுவதாகத் தம்பட்டம் அடித்துக் கொள்ளும்.

அதேவேளை, தேசிய கட்சிகளும் தேசிய கட்சி என நினைத்துக் கொண்டிருக்கும் கட்சிகளும் நாட்டின் பல பகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தி, அடுத்த அரசாங்கத்தைத் தாமே நிறுவுவோம் எனக் கூறும்.

ஒகஸ்ட் ஐந்தாம் திகதி நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலும், புதிய அரசாங்கத்தைத் தாமே நிறுவப் போதாக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் மக்கள் விடுதலை முன்னணியும் கூறி வருகின்றன. எனினும், உண்மையிலேயே தற்போதைய நிலையில், ஒரு கட்சிக்கு மட்டுமே, இம் முறை சந்தேகமின்றி அவ்வாறு கூற முடியும்.

இது ஒரு வகையில், அரசியல் கட்சிகள் வாக்காளர்கள் மீது, ஒருவித மானசிகத் தாக்கத்தை ஏற்படுத்த மேற்கொள்ளும் முயற்சியாகும். ஏனெனில், ஒரு கட்சி வெற்றி பெறும் சாத்தியம் அல்லது, அவ்வாறானதொரு போலியான தோற்றமாவது இருந்தால், அதனாலேயே பலர் அக்கட்சிக்கு வாக்களிக்க முன்வருவார்கள். இதற்குத் தான் 'அரசியல் அலை' என்பார்கள்.

ஒரு கட்சியின் கொள்கைகள், நடவடிக்கைகள் எவ்வளவு தான் பாராட்டக்கூடியவையாக இருந்த போதிலும், அக்கட்சி வெற்றி பெறும் என்றதொரு தோற்றம் இல்லாவிட்டால், அக்கட்சியை மக்கள் ஆதரிக்கப் போவதில்லை.

வெற்றி பெறும் தோற்றம் இல்லாமையாலேயே, மக்கள் விடுதலை முன்னணிக்கு மக்கள் வாக்களிப்பதில்லை. ஆயினும், "மக்கள் புத்திசாலிகள்" என்றே, அரசியல்வாதிகள் பொதுக்கூட்டங்களில் கூறுவார்கள்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினர், தாம் வெற்றி பெறுவதாக மட்டும் இம்முறை கூறுவதில்லை. மாறாக, மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தையும் பெறுவோம் என்றே, இம்முறை கூறி வருகிறார்கள். இது அவர்களது ஆரூடம் மட்டும் அல்ல; அவசியமும் தான்.

ஏனெனில், தற்போதைய அரசமைப்பை, குறிப்பாக 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை மாற்றுவதே, அவர்களது குறிக்கோள்களில் முதன்மையானதாக இருக்கிறது.

பொதுஜன பெரமுன, இம்முறை மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெறும் என்று, அக்கட்சியினர் பிரசாரம் செய்து வந்த போதிலும், அவர்களிலும் பலர், அது நடைமுறைச் சாத்தியமில்லை என்றே நினைக்கின்றனர். வேறு சிலர், அதைப் பற்றிய பெரும் நம்பிக்கையில் உள்ளனர்.

அந்த நம்பிக்கை உள்ளவர்களும் இரண்டு காரணங்களுக்காக அவ்வாறு நம்பிக்கை கொண்டுள்ளனர். ஒரு சாரார், 2018ஆம் ஆண்டு முதல், கட்சி பெற்று வரும் தேர்தல் வெற்றிகளைக் கருத்தில் கொண்டு, இம்முறை தமது கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெறும் என நினைக்கின்றனர்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் ஆகிய இரண்டிலும் தோல்வியடைந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள், பொதுஜன பெரமுனவை அமைத்து, 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெற்றனர். பின்னர், கடந்த வருடம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி பெற்றனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், அக்கட்சி 49 இலட்சம் வாக்குகளை நாடளாவிய ரீதியில் பெற்றது. அந்த எண்ணிக்கை, ஜனாதிபதித் தேர்தலில் 69 இலட்சமாக அதிகரித்தது. எனவே, மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம், தமக்குக் கிடைக்கும் என்ற நிலைப்பாட்டில், அவர்கள் உள்ளனர்.

மற்றொரு சாரார், எந்த அடிப்படையில் தமது கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை பெறும் என்று பார்த்தால், 13ஆம் நூற்றாண்டில், துருக்கியில் வாழ்ந்த கேலிக் கதை புனைபவரான முல்லா நஸ் ரூத்தீன் நினைவுக்கு வருகிறார். நஸ் ரூத்தீனின் ஒரு கதையில், தனது மெலிந்த பசுவை விற்கவென, அதைச் சந்தைக்கு அழைத்துச் செல்கிறார். பசு பெருமளவில் பால் தரும் பசு என, அங்கு வருபவர்களிடம் கூறி, அவர் பசுவை விற்க முயல்கிறார். மெலிந்த பசுவைப் பார்த்த எவரும், அதை நம்பவில்லை. எனவே, பசுவை விலை கொடுத்து எவரும் வாங்கவில்லை. மாலையாகும் போது, தாம் கூறிக் கொண்டு இருக்கும் பொய்யை நஸ் ரூத்தீன்னே நம்பலானார். இவ்வளவு பாலைத் தருவதாக இருந்தால், நான் ஏன் இந்தப் பசுவை விற்க வேண்டும் என நினைத்த அவர், பசுவை மீண்டும் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறார்.

அதேபோல், தமது தலைவர்கள், தமது கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைக்கும் என, முடிவின்றித் தொடர்ந்து கூறி வருவது பொதுஜன பெரமுனவினரின் பலரது மனதில், பெரும் நம்பிக்கையை ஊட்டி இருக்கிறது.

ஆனால், எந்தவொரு கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதானது, அவ்வளவு இலகுவான காரியமல்ல. குறிப்பாக, தற்போது நடைமுறையிலுள்ள விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ், அது மிகவும் கஷ்டமான காரியமாகும்.

பொதுஜன பெரமுனவின் பிரதான போட்டியாளரான ஐக்கிய தேசிய கட்சி பிளவுபட்டு, ஐ.தே.க, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரண்டு கட்சிகளாக, இம் முறை தேர்தலில் போட்டியிடுவதால் ஐ.தே.க வாக்காளர்கள் விரக்தியடைந்து, பெருமளவில் பொதுஜன பெரமுனவுக்கு வாக்களித்தாலும் விகிதாசார முறையின் கீழ், மூன்றில் இரண்டு, அதாவது 225 ஆசனங்கள் உள்ள நாடாளுமன்றத்தில் 150க்கு மேல் ஆசனங்களைப் பெறுவதானது மிகவும் கடினமானதாகும்.

போர் முடிவடைந்தவுடன் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, நாட்டின் மொத்த வாக்குகளில் 60.33 சதவீத வாக்குகளைப் பெற்றது. ஆனால், அக்கட்சி மாவட்ட ரீதியாக, 127 ஆசனங்களையும் தேசிய பட்டியல் மூலம் 17 ஆசனங்களையும் பெற்று, மொத்தம் 144 ஆசனங்களையே பெற்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ 52.25 சதவீத வாக்குகளையே பெற்றார். அந்த வாக்கு சதவீதம் 60ஐத் தாண்டினால், சிலவேளை பொதுஜன பெரமுன இம்முறை மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை பெறலாம்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை மாற்றுவதற்கே, தமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் தேவைப்படுகிறது என பொதுஜன பெரமுனவினர் கூறுகின்றனர். ஏதோ தாம் ஆரம்பத்திலிருந்தே, அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை எதிர்த்ததைப் போல் தான், அவர்கள் அதனை எதிர்க்கிறார்கள். ஆயினும் அத்திருத்தத்தை, நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற ஆகக் கூடுதலான வாக்குகளை அளித்தவர்களும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களே.

2015ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் திகதி, இந்தத் திருத்தம் நிறைவேற்றப்பட்ட போது, அதற்கு ஆதரவாக 215 வாக்குகள் வழங்கப்பட்டன. 50க்கும் குறைவான ஐ.தே.க எம்பிக்களே, அக்காலத்தில் இருந்தனர். மஹிந்த ஆதரவாளர்களே அதனை, நிறைவேற்ற மிகக் கூடுதலான பங்களிப்பை வழங்கினர். வரலாற்றில் மிகக் கூடுதலான வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட அரசமைப்புத் திருத்தமும் இதுவேயாகும்.

மஹிந்தவின் ஆதரவாளரான சரத் வீரசேகர மட்டுமே, அதற்கு எதிராக வாக்களித்தார். மேலும், அவரது ஏழு ஆதரவாளர்கள் வாக்கெடுப்பு நடைபெறும் போது, சபைக்கு வரவில்லை. பசில் ராஜபக்ஷ, பிரேமலால் ஜயசேகர, ஜனக்க பண்டார, ஜகத் பாலசூரிய, கெஹெலிய ரம்புக்வெல்ல, எல்லாவல மேதாநந்த தேரர், சுசந்த புஞ்சிநிலமே ஆகியோரே அந்த எழு பேர் ஆவர். ஜே.வி.பி சார்பில் தெரிவாகிப் பின்னர், முன்னிலை சோஷலிசக் கட்சிக்குத் தாவியிருந்த அஜித் குமார, வாக்கெடுப்பில் கலந்து கொள்ள வில்லை. அவ்வாறாயின், 19 ஆவது திருத்தத்துக்குத் தாம் பொறுப்பல்ல என, ராஜபக்ஷவுக்கோ அவரது ஆதரவாளர்களுக்கோ கூற முடியாது.

**19 ஆவது திருத்தத்துக்குத் தாம் பொறுப்பல்ல என, ராஜபக்ஷவினர் கூற முடியாது**

**19 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற கூடுதல் வாக்குகளை அளித்தவர்கள் ராஜபக்ஷவினரே**

**19 ஆவது திருத்தமே, வரலாற்றில் மிகக் கூடுதலான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது**

## 19 ஆவது திருத்தத்தின் 'நல்ல அம்சங்களை பாதுகாக்க வேண்டும்'

பொதுஜன பெரமுனவின் சில தலைவர்கள் கூறுவதைப் பார்த்தால் அவர்கள், அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை, முழுமையாகவே இரத்துச் செய்யப் போகிறார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. ஆனால், தற்போதைய நிலையில் அத்திருத்தத்தை முழுமையாக இரத்துச் செய்ய முடியாது.

ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள், கடமைகள் போன்ற முன்னைய அரசமைப்பில் இருந்த சில சட்டப் பிரமாணங்கள், அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் கீழ் தான், மீண்டும் கொண்டு வரப்பட்டன. தற்போது, அந்த அரசமைப்புத் திருத்தத்தைப் பூரணமாக இரத்துச் செய்தால், நாட்டில் ஜனாதிபதி ஒருவர் இருக்க மாட்டார். எனவே, பொதுஜன பெரமுனவினர் அந்த அரசமைப்புத் திருத்தத்தைப் பூரணமாக ஒழிக்கப் போவதில்லை.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை, மாற்ற வேண்டும் என்பதில் நியாயம் இருக்கிறது. உண்மையிலேயே, அது நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்குப் பதிலாக, முன்வைக்கப்பட்ட ஒரு திருத்தமாகும். அது, நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்கான பயணத்தை, இடைநடுவே நிறுத்திக் கொண்டதற்குச் சமமாகும்.

அதனால், ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைந்து, பிரதமரின் அதிகாரங்கள் அதிகரித்து, நாட்டில் ஏறத்தாழ சரி சமமான இரண்டு அதிகார மய்யங்கள் உருவாகின. அதன்படி, பிரதமரால் ஜனாதிபதியையோ ஜனாதிபதியால் பிரதமரையோ கட்டுப்படுத்த முடியாததொரு நிலைமை உருவாகியது. இது, குழப்பமான நிலைமைகளைத் தோற்றுவிக்கிறது. கடந்த அரசாங்கத்தில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான பிணக்குக்கு முக்கியக் காரணம் அதுவே.

எனவே, அதைத் திருத்தி அமைக்க வேண்டும் என்பதில், எவ்வித மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. ஆனால் பொதுஜன பெரமுனவின் நோக்கம், முறையான ஆட்சியா என்பதில் சந்தேகமே. அவர்களது கடந்த கால வரலாற்றைப் பார்க்கும் போது, எம். பிக்களை விலைக்கு வாங்கியாவது அவர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை அடைந்தால், அவர்கள் இம்முறையும் 2010ஆம் ஆண்டில் அரசமைப்பின் 18ஆவது திருத்தத்தின் மூலம் செய்ததைப் போல், சுயாதீன் ஆணைக்குழுக்களை ஒழிக்கக்கூடும். சிலவேளை, தகவல் அறியும் உரிமைக்கான பிரமாணங்களையும் ஒழிக்கக்கூடும். ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகரிக்கக்கூடும்.

இம்முறை தேர்தலில், பொதுஜன பெரமுன வெற்றி பெற்றால், மஹிந்த ராஜபக்ஷவே பிரதமராக இருப்பார். அரசமைப்பின் 19ஆவது திருத்தம் மூலம், ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகரிக்க, பொதுஜன பெரமுன நடவடிக்கை எடுத்தால், மஹிந்த வகிக்கும் பிரதமர் பதவியின் அதிகாரங்களில் எந்தளவு குறைப்பார்கள்?

2010ஆம் ஆண்டைப் போல், ஒரு நபர் இருமுறை தான் ஜனாதிபதிப் பதவியில் இருக்க முடியும் என்ற வரம்பை நீக்கினால், மஹிந்தவுக்கும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும். அவ்வாறாயின், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில், பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் மஹிந்தவா, கோட்டாவா?

சரி சமமான, இரண்டு அதிகார மய்யங்களைத் தோற்றுவித்து, நாட்டில் குழப்பகரமானதொரு நிலைமையை உருவாக்கினாலும், அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் மூலம், சிறந்த ஜனநாயக அம்சங்களும் நாட்டுக்குக் கிடைத்தன. தகவல் அறியும் உரிமை அதில் முக்கியமானதாகும். ஜனாதிபதி சர்வாதிகாரியாகச் செயற்படாதிருக்க, அவரைக் கட்டுப்படுத்தும் சுயாதீன ஆணைக்குழுக்கள் இன்னுமொரு நன்மையாகும்.

ஜனாதிபதியின் நடவடிக்கைகள், எவ்வளவு மோசமானவையாக இருந்தாலும், அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாத நிலைமை முன்னர் இருந்தது. அந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைத்து, சட்ட மா அதிபருக்கு எதிரான வழக்கொன்றின் மூலம், ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு எதிராக, சட்டத்தின் மூலம் பரிகாரம் காணும் பொறிமுறையொன்றை, அரசமைப்பின் 19ஆவது திருத்தம் தந்தது. 2018ஆம் ஆண்டு, மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்றத்தைக் கலைத்த போது அந்தப் பிரமாணங்களின் படியே, உயர் நீதிமன்றம் அது, சட்ட விரோதமானது எனத் தீர்மானித்தது. இந்த நல்ல அம்சங்கள் ஒழிக்கப்படுமாயின், மீண்டும் சர்வாதிகார நிலைமை, நாட்டில் உருவாகும் அபாயம் இருக்கிறது.

இந்தியாவில் அகதி முகாம்களிலுள்ள மக்களை அழைத்துவந்து

# ‘சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டும்’



வடமலை ராஜ்குமார்

இந்தியாவில் உள்ள அகதி முகாங்களில் தங்கியுள்ள இலங்கையர்களைத் திரும்ப அழைத்துவந்து, அவரவர் இடங்களில் குடியமர்த்த எண்ணியுள்ளதாக, இலங்கைத் தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் தலைவரும் வேட்பாளருமான சண்முகம் குகதாசன் தெரிவித்தார். இது தொடர்பில் தமிழ்மிரருக்கு அவர் வழங்கிய செவ்வியின் முழு விவரம் வருமாறு,

**கே: நீங்கள் இலங்கையைவிட்டு வெளியேற முன்பு, திருகோணமலை மாவட்டத்துக்கு எவ்வாறான சேவைகளை ஆற்றியுள்ளீர்கள்?**

நான் கொழும்புப் பல்கலைகழகத்தில் படித்துக்கொண்டிருந்தபோது, 1977 இனக் கலவரம் ஏற்பட்டது. இந்த இனக்கலவரத்தில், அக்குரஸ்ஸ, அவிசாவளை, தெஹியோவிட்ட, நிக்கவெரட்டிய பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மக்கள், உடைமை அனைத்தையும் இழந்து அகதிகளாய் முகாம்களில் தங்கியிருந்தனர். நான் அவர்களைத் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கல்லம்பத்தை, பன்குளம், பறையன்குளம், புளியடிச்சோலை முதலிய இடங்களில் குடியமர்த்தும் பணிகளுக்குத் தலைமைதாங்கிச் செயற்பட்டேன். இந்த முயற்சியின் மூலம், அண்ணளவாக 800 குடும்பங்கள், திருகோணமலை மாவட்டத்தில் குடியமரவும் மறுவாழ்வு பெறவும் ஆவனஞ்செய்துள்ளேன்.

**கே: நீங்கள் இலங்கையை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் வாழ்ந்த காலத்தில், தமிழ்ச் சமூகத்துக்கு எவ்வகையான உதவிகளைச் செய்துள்ளீர்கள்?**

தமிழகத்தில் வாழ்ந்த காலப்பகுதியில், இலங்கையில் இடம்பெற்ற இனக் கலவரங்களால் உடைமைகளை இழந்து, உறவுகளை இழந்து அகதிகளாகத் தமிழ்நாட்டுக்கு வந்து நூற்றுக்கும் மேற்பட்ட அகதி முகாங்களில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் ஏதிலியருக்கு, ஏறத்தாழ ஆறு ஆண்டுகளாக நிவாரணம், மறுவாழ்வு மற்றும் கல்வி வழங்கும் பணியில் முழு நேரமாக ஈடுபட்டேன்.

180 இலங்கை அகதி மாணவர்கள், மருத்துவக் கல்வியையும் 480 மாணவர்கள் பொறியியல் படிப்பையும், 2,000 மாணவர்கள் - பட்டப்படிப்பையும் பெற உதவினேன். பணவசதியற்ற மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கான பண உதவியையும் பெற்றுக் கொடுத்தேன்.

கனடாவில் வசித்த காலத்தில், கனடாவுக்கு வந்த இலங்கைத் தமிழரது பிள்ளைகள், தமிழர் என்ற அடையாளத்தைத் தொலைக்காமல் இருக்க வேண்டும் என்ற நோக்கோடு, அரச மற்றும் அரச சாரா நிறுவனங்கள் வழியாகத் தமிழ் கல்வியை ஊக்குவிக்கும் முயற்சியில் ஈடுபட்டேன்.

கனடாவில் தமிழ் கற்பிப்பதற்குப் பாடநூல் இன்மை பெரும் சிக்கலாக இருந்தது. இதை நீக்கும் பொருட்டு, டொரன்டோ மாவட்டக் கல்விச் சபை, டொரன்டோ மாவட்டக் கத்தோலிக்க கல்விச் சபை, கனடா தமிழ்க் கல்லூரி முதலிய அமைப்புகளுக்கு, கனேடிய கல்வி முறைக்கு அமைய சம்பளம் எதுவும் வாங்காமல், பாடநூல்களையும் பயிற்சி நூல்களையும் எழுதிக் கொடுத்தேன்.

கனடாவில் உள்ள தமிழ்க் கற்றை நிறுவனங்களில், ஆசிரியர், அதிபர், அறிவுரையாளர், விரிவுரையாளர், துறைத்தலைவர் முதலிய பதவிகளில் பணிபுரிந்து, தமிழ்க் கல்வியை ஊக்குவித்தேன். தமிழகத்தில் உள்ள திருநெல்வேலி பல்கலைக்கழகத்தோடு இணைந்து, தமிழ் பீ.ஏ. எம்.ஏ பட்டப்படிப்புகளைக் கனடாவுக்குக் கொண்டுவந்தேன். இதன் மூலம், கனடாவில் தமிழ் மொழிப் பட்டதாரிகளையும் ஆசிரியர்களையும் உருவாக்குவதில் முதன்மையாகப் பங்கு வகித்தேன்.

கனடா அரசின் குடியமர்வு மற்றும் இசைவாக்கத் திட்டத்தின் இணைபாளராகப் பணிபுரிந்து, இலங்கை மற்றும் தமிழ்நாடு உள்ளிட்ட உலகின் பல பாகங்களில் இருந்தும் கனடாவுக்கு வரும் பல்லாயிரக்கணக்கான புதிய குடிவரவாளருக்கு, கல்வி, வேலைவாய்ப்பு உள்ளிட்ட புதுவாழ்வு கிடைக்கத் துணைபுரிந்தேன்.

நான் கனடாவில் இருந்த காலத்தில், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில், நிவாரணம், மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றப் பணிகளுக்குச் சில கோடி ரூபாய்களை வழங்கியுள்ளேன். எடுத்துக் காட்டாக, 2011ஆம் ஆண்டில், திருகோணமலையில் ஏற்பட்ட வெள்ளத்தின் போது, நிவாரணத்துக்காக ஐம்பது இலட்சம் ரூபாயை வழங்கியுள்ளேன்.

இறுதிப் போரின் முடிவில், வவுனியா முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்களை, 2010ஆம் ஆண்டில் மீள்குடியேற்றம் செய்தபோது, கிளிநொச்சி மாவட்ட மக்களின் குடியேற்றத்துக்கு மட்டும் அறுபது இலட்சம் ரூபாயை வழங்கியுள்ளேன். இதேபோல, முல்லைத்தீவு, வவுனியா முதலிய மாவட்ட மக்களின் மீள்குடியேற்றத்துக்கும் உதவி உள்ளேன்.

போராலும் சுனாமியாலும், பெற்றோர் மற்றும் உற்றாரை இழந்து இன்னலுக்குள்ளான சிறார்களுக்கு, இல்லங்களை அமைக்கவும் அவற்றைப் பராமரிக்கவும், உயர்கல்வியைத் தொடரவும் தேவையான நிதி உதவியை வழங்கியுள்ளேன்.

> **திருகோணமலை மாவட்டத்தின் கடற்றொழில், கமத்தொழிற்றுறைகளில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகஞ்செய்து, வருவாயைப் பெருக்கி, இத்துறைகளில் தங்கியுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் கைத்தொழில் மற்றும் சுற்றுலாத் துறைகளை மேம்படுத்தவும், இளையோரின் வினைத்திறன்களை மேம்படுத்தவும் திட்டம்**

**கே: 2018ஆம் ஆண்டில் நிரந்தரமாக இலங்கைக்குத் திரும்பி வந்தபின்னர், திருகோணமலை மாவட்டத்துக்கு ஆற்றிய பணிகள் என்ன?**

சம்பந்தன் ஐயாவின் வழிகாட்டல், நெறிப்படுத்தல், ஆதரவுடன், 2019ஆம் ஆண்டில் மட்டும் 2,217 மில்லியன் ரூபாய் செலவில், அபிவிருத்திப் பணிகளை ஆற்றியுள்ளேன். அந்தவகையில், இந்தியாவில் இருந்து திருகோணமலைக்குத் திரும்பி வந்தோருக்கு, 600 வீடுகளை உள்ளூரில் இடம்பெயர்ந்தோருக்கு 300 வீடுகளையும் அமைக்கவும், 131 வீடுகளைத் திருத்தவும் 25 குளங்கள், அணைக்கட்டுகளை அமைக்க அல்லது திருத்தவும், 120 வீதிகளை அமைக்கவும், 57 பாடசாலைக் கட்டடங்கள் அமைக்க அல்லது திருத்தவும்; 63 கோவில்களின் திருத்த வேலைகளுக்கு உதவவும், 04 நீர் வழங்கல் இணைப்புத் திட்டங்களை மேற்கொள்ளவும், ஒரு மருத்துவமனையைத் திருத்தவும், மருத்துவக் கருவிகளைக் கொள்வனவு செய்யவும், கடற்றொழிலாளருக்கான ஆறு கட்டடங்களை அமைக்கவும்; பெண்களுக்கான நான்கு கைத்தொழில் முயற்சிகளை உருவாக்கவும்; இளையோருக்குத் தொழில் பயிற்சி அளிக்கவும், அவர்களுக்குச் சுயதொழில் முயற்சிகளை உருவாக்கவும், சமூகச் சேவைக் கட்டடங்களை அமைக்கவும் ஆவனஞ்செய்துளேன்.

அண்ணளவாக, திருகோணமலையைச் சேர்ந்த 150 இளையோருக்கு, பல்வேறு அரச துறைகளில் வேலைபெற உதவியுள்ளேன். தந்தையை இழந்த 35 பல்கலைக்கழக மாணவர்கள் கல்வியைத் தொடர, மாதந்தோறும் உதவி வருகின்றேன். பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வருவாய் தரும் தொழில் முயற்சிகளை உருவாக்கி கொடுத்துள்ளேன்.

2010ஆம் ஆண்டில் தென்னமரவடி கிராம மக்கள் மீள்குடியமர வந்தபொழுது, அவ்வூர் முழுமையாகக் பற்றைக் காடாகி இருந்தது. ஜெ.சி.பி லோடர் முதலிய கனரக இயந்திரங்களைப் பயன்படுத்தி, பற்றைகளை அழித்து ஊராக்குவதற்கான செலவை நானே வழங்கினேன்.

அதன் பின்பு அங்கு குடியேறிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில், தொடர்ந்து ஈடுபட்டு வந்துள்ளேன். அங்குள்ள கணவனை இழந்த பெண்கள் அனைவருக்கும், வாழ்வாதாரத்துக்காக பசுக்களைக் கொள்வனவு செய்ய பணம் வழங்கினேன். தென்னமரவடிக் கிராம மக்களுடைய வருமானத்தைப் பெருக்கும் நோக்குடன், இருபது ஏக்கர் பரப்பளவில், ஒன்றிணைந்த கால்நடைப் பண்ணை ஒன்றை 30 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றேன். பாடசாலைக் கட்டடங்களைத் திருத்துதல், சுற்றுமதில் கட்டுதல் ஆகிய பணிகளுக்கும் ஆவனஞ்செய்துள்ளேன்.

**கே: எதிர்காலத்தில் திருகோணமலை மாவட்டத்துக்கு என்னென்ன வேலைகளைச் செய்ய எண்ணியுள்ளீர்கள்?**

திருகோணமலை மாவட்டத்தின் கடற்றொழில், கமத்தொழிற்றுறைகளில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகஞ்செய்து, வருவாயைப் பெருக்கி, இத்துறைகளில் தங்கியுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் கைத்தொழில் மற்றும் சுற்றுலாத் துறைகளை மேம்படுத்தவும், இளையோரின் வினைத்திறன்களை மேம்படுத்தி, வேலைவாய்ப்பு பெறுவதை எளிமைப்படுத்தவும் எண்ணியுள்ளேன். மேலும், திருகோணமலையைச் சேர்ந்தோர் இருபது ஆயிரம் பேர் வரையில் இந்தியாவில் உள்ள அகதி முகாங்களில் தங்கி உள்ளனர். இவர்களைத் திரும்ப அழைத்துவந்து, அவரவர் இடங்களில் குடியமர்த்தவும் எண்ணியுள்ளேன்.

**கே: நீங்கள் எப்பொழுது தொடக்கம் தமிழரசுக் கட்சியின் உறுப்பினராக இருக்கின்றீர்கள்?**

1975ஆம் ஆண்டு முதல், தமிழரசுக் கட்சியின் உறுப்பினராக இருந்து வருகிறேன். 1976 முதல் 1984 வரை, தமிழரசுக் கட்சியின் திரியாய் கிளைத் தலைவராகப் பணிபுரிந்தேன். 1994 தொடக்கம் 2017 இறுதி வரை, தமிழரசுக் கட்சியின் கனடாக் கிளைச் செயலாளர், தலைவர் ஆகிய பொறுப்புகளில் பணியாற்றியுள்ளேன். 2018ஆம் ஆண்டு முதல், தமிழரசுக் கட்சியின் திரியாய் கிளைத் தலைவர், கட்டுகுளப்பற்றுக் கோட்டக் கிளைத் தலைவர் மற்றும் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவராகப் பணிபுரிந்து வருகின்றேன்.



சண்முகம் குகதாசன்
தமிழ்த் தேசிய கூட்டமைப்பு
வீட்டுச் சின்னம்
இலக்கம் 3
திருகோணமலை மாவட்டம்

# ‘முஸ்லிம் அரசியல் பிழைத்துவிட்டது’

## பழிவாங்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை என்கிறார் பஷீர்



எஸ்.எம்.எம்.முர்ஷித்

ஓர் அரசாங்கம், ஓரினத்தைத் தனிப்பட்ட முறையில் பழிவாங்கும் செயற்பாடுகளைச் செய்யும் என்று நினைக்கவில்லை. ஆனால், இந்நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே, சிங்கள மேலாதிக்கச் சிந்தனை கொண்ட செயற்பாடுகள், நிறையவே நடந்திருக்கின்றன. சில விடயங்கள் தற்போது நடைபெறுவதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன. ஆனால், முஸ்லிம்கள் வாக்குகளை அளிக்கவில்லை என்று, தனிப்பட்ட முறையில் பழிவாங்கும் நிலைமை இல்லை. எவ்வாறாயினும், முஸ்லிம் அரசியல் பிழைத்துவிட்டதென, முன்னாள் அமைச்சரும் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் வேட்பாளருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார். தமிழ்மிரருக்கு அவர் வழங்கிய பிரத்தியேகச் செவ்வியிலேயே, மேற்கண்டவாறு தெரிவித்தார். செவ்வியின் முழு விவரம் வருமாறு,

**கே: நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் உங்கள் நிலைப்பாடு...**

ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு என்ற எமது கட்சி, இம்முறை நாடாளுமன்ற தேர்தலில், மட்டக்களப்பு மாவட்டத்தில் களமிறங்கியுள்ளது. எமது இந்தக் கட்சி, கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளரான கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கு ஆதரவளித்தது. ஜனாதிபதித் தேர்தலின் போது, எமது கட்சிக்கும் பொதுஜன பெரமுன கட்சிக்கும் இடையில், எழுத்து மூலமான ஓர் ஒப்பந்தம் இருந்தது.

அந்த வகையில், இப்பொழுது நடைபெற இருக்கிற நாடாளுமன்றத் தேர்தலில், பொதுஜன பெரமுன கட்சியின் ஆசிர்வாதத்தோடு, எதிர்காலத்திலே அரசாங்கத்தோடு இணைந்து செயற்படுகின்ற வகையிலே நாங்கள் இம்முறை தேர்தலில் இறங்கியிருக்கிறோம்.

இந்தத் தேர்தலில் நாங்கள் வெற்றியடைகிற போது, நாடாளுமன்றத்தில் பொதுஜன பெரமுனவின் பக்கத்திலேயே இருந்து முழுமையாகச் செயற்படுவதற்குத் தயாராக இருக்கிறோம். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம், தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

**கே: பொதுஜன பெரமுன கட்சியுடனான ஒப்பந்தத்தில், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புதிய உள்ளூராட்சி மன்றம் அமைப்பது தொடர்பில் ஏதாவது கூறப்பட்டிருக்கின்றதா?**

மட்டக்களப்பு மாவட்டம் மாத்திரமல்ல, கிழக்கிலங்கை முழுவதிலும் இருக்கிற உள்ளூராட்சி சபைகளை அதிகரிப்பது தொடர்பான ஒரு விடயம், எங்களுடைய ஒப்பந்தத்தில் இருக்கிறது. நாங்கள், முஸ்லிம்களுக்கு மட்டும்; தமிழர்களுக்கு மட்டும் என்று வடக்கு, கிழக்கில் சபைகளை விடவும், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கான சபைகளை அதிகரிக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் செயற்படுகிறோம். அதுபோன்று, வடக்கு, கிழக்குக்கு வெளியிலும் சிங்கள மக்கள் வாழும் பகுதிகளிலும், அதிகமாகத் தனித்து இயங்கக்கூடிய உள்ளூராட்சி சபைகளுக்கான கோரிக்கைகள், பொதுஜன பெரமுன அரசுடன் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கும் நாங்கள் ஆதரவு வழங்கும் வகையில், எங்களது கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றித் தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

**கே: உங்கள் கட்சி முன்வைத்த கோரிக்கைகளை, நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் பொதுஜன பெரமுன கட்சியினர் நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கை உள்ளதா?**

எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில், முஸ்லிம் மக்களில் பெரும்பான்மையானவர்கள், பொதுஜன பெரமுன கட்சிக்கு ஆதரவு வழங்கவில்லை என்ற பொழுதிலும், நானும் எங்களைப் போன்றவர்களும், தீவிரமாக ஆதரவளித்துச் செயற்பட்டவர்கள் என்ற அடிப்படையிலும் 12.5 சதவீதம் வாக்குகள் பொதுஜன பெரமுன கட்சிக்கு கிடைத்தது என்ற அடிப்படையிலும், இந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிகமான முஸ்லிம்கள் அல்லது அதிகமான தமிழ் வேட்பாளர்கள், பொதுஜன பெரமுன கட்சியில் கேட்காமல் விட்டாலும், அவர்களது நேசக் கட்சியில் கேட்பவர்களுக்குச் சரியான மரியாதை, வேட்பாளர்கள் வெற்றி பெறும்போது மக்களின் அங்கிகாரம் கிடைக்கும் போது, இந்த அரசாங்கம் கணக்கெடுக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

> **மக்களின் குரலாக அரசாங்கத்துக்குள் இருப்பதற்கு, சிறுபான்மை மக்களின் குரலாகச் சிங்களப் பெரும்பான்மைக்குள்ளும் மற்றும் சிறுபான்மை மக்களின் குரலாக அரசாங்கத்துக்குள்ளும், நாடாளுமன்றத்துக்குள்ளும் இருப்பதற்கான வாய்ப்பு வேண்டும்**

> **ஓர் அரசாங்கம், ஓரினத்தைத் தனிப்பட்ட முறையில் பழிவாங்கும் செயற்பாடுகளைச் செய்யும் என்று நினைக்கவில்லை. ஆனால், இந்நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே, சிங்கள மேலாதிக்கச் சிந்தனை கொண்ட செயற்பாடுகள், நிறையவே நடந்திருக்கின்றன. சில விடயங்கள் தற்போது நடைபெறுவதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன**

**கே: நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர், முஸ்லிம்கள் வாக்களிக்கவில்லை என்றால் பழிவாங்குவார்கள் என்ற அச்சம் மக்கள் மத்தியில் உள்ளமை தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

ஓர் அரசாங்கம், ஓரினத்தைத் தனிப்பட்ட முறையில் பழிவாங்கும் செயற்பாடுகளைச் செய்யும் என்று நினைக்கவில்லை. ஆனால், இந்நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே, சிங்கள மேலாதிக்கச் சிந்தனை கொண்ட செயற்பாடுகள், நிறையவே நடந்திருக்கின்றன. சில விடயங்கள் தற்போது நடைபெறுவதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன. ஆனால், முஸ்லிம்கள் வாக்குகளை அளிக்கவில்லை என்று, தனிப்பட்ட முறையில் பழிவாங்கும் நிலைமை இல்லை. எவ்வாறாயினும், முஸ்லிம் அரசியல் பிழைத்துவிட்டது.

முஸ்லிம்களுடைய அரசியல் தலைவர்கள், தங்கள் சொந்த நலனுக்காகவேண்டி இவ்வாறான அரசியல் செய்கின்ற காரணத்தால், பொது நிலை, சமூக நலனை மறந்து, மக்களுக்குச் சரியான அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை அவர்கள் தவிர்த்து, தனிப்பட்ட அரசியல் செய்கின்ற காரணத்தினால், தங்களுடைய நலன்களுக்கு ஏற்ற வகையிலேயே ஆளுங்கட்சியின் பக்கம் ஒரு கட்சி வெற்றி பெற்ற பின் வருவது, பின்பு அடுத்த தேர்தல் வருகின்ற போது எதிர்கட்சியில் சேர்ந்து தேர்தலில் ஆளும்கட்சியைத் தோற்கடிக்க முற்படுகின்ற ஒரு மூடத்தனமான அரசியலைச் செய்து வந்த காரணத்தினால், ஒரு கோபம் இருக்கிறது. அது, முஸ்லிம் மக்கள் மீதான கோபமில்லை. முஸ்லிம் அரசியல் கட்சிகள் மீதான கோபம். அந்தக் கோபத்தைத் தனித்துச் செயற்படுத்துவதற்கே நாங்கள் களத்தில் இறங்கியுள்ளோம்.

**கே: பொதுத் தேர்தல் தொடர்பில் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு சார்பாக மக்களுக்குக் கூறும் கருத்து என்ன?**

ஒரே ஒரு விடயம், சிங்கள மக்களுக்குள் அதிகமான ஆதரவைப் பெற்றிருக்கிற அந்தப் பெரிய சிங்களத் தலைவர்களோடு; பெரிய கட்சியோடு, எங்களுடைய மக்கள் இணைந்து பயணிப்பதற்குரிய ஒரு முடிவை இந்தத் தேர்தலில் எடுக்கப்பட வேண்டும். அந்த முடிவை, மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் மக்கள், தமிழ் மக்கள் எடுக்கும்போது, அந்த அரசாங்க கட்சியோடு நேசத்தோடு செயற்படுகின்ற, சரியாக புரிந்துணர்வோடு செயற்பட, கட்சிகளிலிருந்து உறுப்பினர் தெரிவுசெய்ய வேண்டும். அப்போதுதான் அந்தச் சிங்கள் மக்கள் காலந்தாழ்த்திக் கேட்கக்கூடிய குரலை உருவாக்க முடியும். அரசாங்கத்தால் காலந்தாழ்த்திக் கேட்கின்ற முஸ்லிம் குரலை, தமிழ் குரலை உருவாக்க முடியும். அதுமாத்திரமல்ல, அரசாங்கக் கட்சியில் நாங்கள் தேசிய பட்டியலிலோ அல்லது அரசாங்கக் கட்சிகளின் அனுசணையுடனோ நாடாளுமன்றம் சென்றால், அங்கு நாங்கள் மக்களின் குரலாக ஒலிப்பதற்கு எந்தவித வாய்ப்பும் இல்லை. அரசாங்கத்தின் குரலாகத்தான் மக்கள் கொண்டிருக்கலாம். நன்றாகச் சிந்திக்க வேண்டும். மக்களின் குரலாக அரசாங்கத்துக்குள் இருப்பதற்கு, சிறுபான்மை மக்களின் குரலாகச் சிங்களப் பெரும்பான்மைக்குள்ளும் மற்றும் சிறுபான்மை மக்களின் குரலாக அரசாங்கத்துக்குள்ளும், நாடாளுமன்றத்துக்குள்ளும் இருப்பதற்கான வாய்ப்பு வேண்டும். எதிர்கட்சியில் இருந்து கொண்டு கூக்குரல் இடுவதை விட அரசாங்கத்தோடு சமரசமாகப் பேசித் தீர்வைக் காண்கின்ற ஒரு வாய்ப்பையும், இணக்க அரசியலுக்கான வாய்ப்பையும் மக்கள் வழங்க வேண்டும்.



பஷீர் சேகுதாவூத்
ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு
சின்னம்: வண்ணத்திப்பூச்சி
இலக்கம்: 4
மட்டக்களப்பு மாவட்டம்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 15 ஜூலை 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.